உ

சிவமயம்

தெய்வ தரிசனம்

உசன், மிருசுவிலைச் சேர்ந்த

அமரர்

திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

(தங்கம்மா ரீச்சர்)

அவர்களின் அமரத்துவம் குறித்த

ஞாபகார்த்த வெளியீடு

27.06.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அருள்தந்து வினைதீர்க்கும் கலியுகவரதனே உசன்கந்தா
அருள்வேண்டி உன்மணியோசைகேட்டு கூடும் அடியவரின்
இருள் அகற்றி ஒளிகொடுத்து வாழவைத்த முருகையனே
கருணைக்கடலே உன்புகழ் காலத்தால் அழியாதப்பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

உசன் மிருசுவிலைச் சேர்ந்த

அமரர்
திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்
(தங்கம்மா ரீச்சர்)

அவர்களின் அமரத்துவம் குறித்த
ஞாபகார்த்த வெளியீடு

27.06.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்புத் தெய்வத்தின்
திருப்பாதங்களிற்கு
இந் நூல்

சமர்ப்பணம்

இல்லற தர்மம் இனிதே மிளிர
மரபினைப் பேணி மாண்புடன் வாழ்ந்து
தங்களை உருக்கி எங்களை ஓம்பிய
பன்னருந் தியாகப் பண்புடைத் தலைவி
சடுதியில் காலன் கவர்ந்திடச் சென்றீர்
யாரழைத்தாலும் சென்றிட விரும்பாக்காலை
உங்கள் பொன்னடிக் கிம்மலர் சமர்ப்பணமம்மா

அடைக சாந்தி அனைவருமே துதிப்போம்

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி !!!

இங்ஙனம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அமரர்

திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

அவர்கள்

அன்னை மடியில்	ஆண்டவன் அடியில்
10.07.1937	28.05.2012

திதிவெண்பா

ஆண்டாகும் நந்தனத்தில் ஆனவைகா சிப்பூர்வங்
காண்பார்க்கா மட்டமியாய்க் காண்திதியில் - மாண்புடனே
செம்மையாய் வாழ்ந்துயர்ந்த தெய்வானைப் பிள்ளையவள்
நம்பரன்றாள் சேர்ந்தாள் நயந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பஞ்சபுராணம்

திருச்சிற்றம்பலம்

விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன்
அடியின்கீழ் இருக்க என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள் அளிக்கும் உசன் கந்தசுவாமியே சரணம்

1. பன்னிரண்டு திருக்கரமும் பவள வாயும்
பகரரிய ஒளிராறு முகமும் கொண்ட
தன்னிகரில் வேலவனே ஈழந் தன்னில்
தக்கவர்கள் வாழ்கின்ற யாழ்ப்பாணக் கீழ்பால்
தென்னையொடு பனைகமுகு வயல்கள் சேர்ந்த
சிறப்புமிகும் உசனாம் நற்பதியில் மேவிக்
கன்னியர்கள் இருவரொடும் சேர்ந்து தோன்றும்
கதிர்வேலா நன்முத்துக் குமரா போற்றி

2. சைவமொடு நற்றமிழும் போற்றி வாழ்ந்த
தகவுடையோர் வாழ்ந்ததிரு ஊராம் எங்கள்
தெய்வபதி உசனதனிற் கோயில் கொண்டீர்
சிதைத்தனரே பறங்கியர்கள் உனது கோயில்
உன்னுதற்கும் அரியஉந்தன் கருணை யாலே
உயர்வுடைய உடையாராம் வேலுப் பிள்ளை
பன்னரிய திருத்தொண்டு செய்யும் போது
பார்த்தாரே உனதுதிரு வேலை அன்று

3. அன்று தொட்டுக் கோவிலொன்று அமைத்திட் டார்கள்
அருமையொடு பூசனைகள் செய்தே வந்தார்
மன்றுளதில் நடனமிடும் சுவாமி மைந்தா
மன்பதைகள் வாழ்வதுவும் உயரப் பெற்றார்
செந்நெல்வயல் தோப்புக்கள் யாவும் ஈந்து
சேரவே புதுக்கோவில் ஆக்கி யுள்ளார்
சிந்தையிலே சிவம்பூத்த வைத்தி லிங்கம்
செப்பிடற்கும் அவர் தொண்டு அரிதே யன்றோ.

4. உசன் முத்துக் குமாரரது புதுமை யாலே
உண்டியலே ஒருநாளும் இருந்த தில்லை
அசைவில்லாச் சொத்துகளை அள்ளி ஈந்த
அன்பருளம் மகிழ்ந்துநல்ல வாழ்வும் பெற்றார்
திசைதொறுமே புகழ்வீச அடியார் உன்றன்
திருக்கோவில் தனையடைந்து தொழுகின் றாரே
இசையுடனே ஈழமணித் திருநன் னாட்டில்
இலங்கியிடு கருணைமிகு கடவுள் நீரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கடைச்சங்கம் தானிருந்து தமிழை ஆய்ந்த
கருணையுறு பரம்பொருளே கார்த்தி கேயா
இடரனைத்தும் துடைத்தெறிந்து நாமும் வாழ
இலங்கியிடும் குலதெய்வம் நீரே யன்றோ
அடர்துன்பம் அடியார்க்கு நேர்ந்தி டாமல்
அகிலத்தில் அருளாட்சி புரியும் ஐயா
சுடர்வடிவேல் தனைத்தாங்கி எம்முன் தோன்றிச்
சுப்ரமண்ய சுவாமியெமைக் காத்துக் கொள்வீர்.

6. பூசகர்கள் தொண்டர்கள் புராணம் சொல்வோர்
புண்ணியா உன்கோவில் தனக்கே சொந்தம்
தேசமெல்லாம் உள்ளவர்கள் அருளை வேண்டிச்
சேரநின்று தொழுதுநல்ல வரமும் பெற்றார்
காசினியில் உசன்முருக வேளே யுன்றன்
கருணையதைச் செப்பிடவும் முடியா தையா
நேசமுற்று மடியவர்கள் நெஞ்சில் வைகும்
நின்மலா உனக்கென்றும் சரணம் நாமே.

மங்களம்

உசனிலுறை முருகனுக்கு மங்களம் மங்களம்
உருகுமடி யார்தமக்கு மங்களம் மங்களம்
இசைபெருகு வைத்திலிங்க பெரியார்க்கு மங்களம்
இவர்மரபில் உதித்தவிமல தாசருக்கு மங்களம்
பரம்பரையாய்த் தொண்டு செய்யும் அடியார்க்கு மங்களம்
தக்கவராய்த் திருமுறைகள் ஓதுவோர்க்கு மங்களம்
திசைவிளங்கப் பூசைசெயும் குருமார்க்கு மங்களம்
செகம்புகழ ஊரிலுறை யாவருக்கும் மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் சுப மங்களம்
மாநிலத்தோர் யாவருக்கும்
மங்களம் ஜெய மங்களம்

ஆக்கம்:-
பண்டிதை திருமதி பொன் பாக்கியம்
ஓய்வுநிலை ஆசிரியை
(பண்டிதமணி நூல் வெளியீட்டுச்
சபைத் தலைவர்)
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த கொடிக் கவி.

கட்டளைக் கலித்துறை.

ஒளிக்கு மிருளுக்கு மொன்றேயி டமொன்று மேலிடில்
ஒன்றொளிக்கு மென்னும் இருள் அடராது
- உள்ளுயிர்க்குயிராய்க்
தெளிக்கு மறிவு திகழ்ந்துளதேனும் திரிமலத்தே
குளிக்கு முயிரருள் கூடும்படிக் கொடி கட்டினனே.

நேரிசை வெண்பா

பொருளாம் பொருளேது முன்னேது போதேது கண்ணேது
இருளாம் வெளியேது இரவேது அருளாளா
நீபுரவா வையமெல்லாம் நீயறியக் கட்டினேன்
கோபுர வாசற் கொடி.

வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையனை - நோக்கிப்
பிறித்தறிவு தம்மிற் பிரியாமை தானே
குறிக்கு மருள்நல்கக் கொடி.

அஞ்செழுத்து மெட்டெழுத்து மாறெழுத்தும் நாலெழுத்தும்
பிஞ்செழுத்தும் மேலைப் பெருவெழுத்தும் - நெஞ்சழுத்திப்
பேசு மெழுத்துடனே பேசா வெழுத்தினையும்
கூசாமற் காட்டக் கொடி.

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சாயைப் பிறப்பிடமாகவும்
உசனை வாழ்விடமாகவுங் கொண்ட
அமரர் தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் (தங்கம்மா ரீச்சர்)
ஓய்வுநிலை ஆசிரியர் உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்
அவர்களின்

"வாழ்வும் வளமும்".

யாழ்ப்பாணக் குடாநாட்டின் வளங்கொழிக்கும், வந்தோரை வாழ வைக்கும் பிரதேசமான தென்மராட்சிப் பகுதியிலே கடல் வளத்தையண்டிய ஊரான கச்சாயில் பிறந்து, பின்னர் தாயாரின் சொந்த ஊரான உசன் பதியை தனது வாழ்விடமாகவும், ஆரம்பக் கல்வியின் அடித்தளமாகவும் பின்னர் ஆசிரியராகவும் நீண்ட காலம் பணியாற்றிய அமரர் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலிருந்தே தமது ஆசிரியப் பணியிலிருந்தும் ஓய்வும் பெற்றார்.

வரணி, எருவன் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர் முருகேசு மயில்வாகனம் அவர்களும் மிருசுவில் உசன்பதியைச் சேர்ந்த அருணாசலம் சின்னப்பிள்ளை அவர்களுமிணைந்த தாம்பத்திய உறவில் ஒருவராக அமரர் தெய்வானைப்பிள்ளை பேரம்பரம் 10.07.1937ல் இத்தரணியில் வந்துதித்தார். இவருக்கு மாணிக்கம், வள்ளியம்மை (ஆசிரியர்) எனும் அன்புச் சகோதரிகளும் உடன்பிறப்புக்களாயினர்.

தந்தையார் அன்னாரின் சிறுவயதிலேயே இறப்பெய்திய காரணத்தினால் தாயாரின் பிறப்பிடமான உசன்பதியிலே தாயாரின் அரவணைப்பிலேயே வாழ்ந்தும் வந்தார்.

தனது ஆரம்பக் கல்வியை கொடிகாமம் திருநாவுக்காரசு வித்தியாலயத்தில் இரண்டாம் வகுப்பு வரையும் மூன்றாம் வகுப்பு தொடக்கம் S.S.C வரை யா/உசன் சைவத்தமிழ்க்கலவன் பாடசாலையிலும் (தற்போது உசன் இராமநாதன் ம.வி) S.S.C யை ஆங்கில மொழி மூலம் யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் பயின்றார்.

தனது குருத்துவப் பணிக்கான ஆரம்ப பயிற்சியை 1957 – 1958ம் வருடத்தில் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் பெற்றுக்கொண்டார். கல்வியில் சிறந்து விளங்கவும் ஆசிரியப் பணியில் ஒளியூட்டவும் இவருக்கு அமர்களான மு. சி. சிற்றம்பலம், பண்டிதர் சு. க. தம்பு, பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை, தத்துவ ஞானி பேராசிரியர் கைலாசபதி ஆகியோர் ஆசிரியர்களாக கிடைத்தமை அன்னார் வாழ்நாளில் செய்த பேறாக கருதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவநெறி தழைத்தோங்க, அறநெறியை, ஆய கலைகளை கற்பித்த அறிவு சீலர்களின் அறிவுரைக்கேற்ப அவர்களைப் போல அன்னார் தம்மை ஆசிரியத் தொழிலிலேயே உள்வாங்கிக் கொண்டார்.

ஆசிரியையாக பணியாற்ற தனது முதலாவது நியமனத்தை தற்போதய சைவப் பிரகாச மகளிர் மத்திய கல்லூரியாக உள்ள வவுனியா/ சைவப்பிரகாச வித்தியாசாலையில் பெற்று 02.11.1962 தொடக்கம் 28.02.1963 வரை பணியாற்றி, பின்னர் 01.03.1963 இலிருந்து 29.07.1995 வரை யா/உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்திலேயே பணியாற்றி தனது 58வது வயதில் ஓய்வு பெற்றார். நல்ல ஆசிரியையாக பணியாற்றிய அமரருக்கு அவரது அன்புள்ளங்கள் வைத்த பெயர் "தங்கம்மா ரீச்சர்". பெயருக்கேற்ப தங்கமான மனதைக் கொண்ட அமரர் திருமதி தெய்வானைப்பிள்ளையவர்கள் அவருடைய மாணவர்களால் என்றும் நேசிக்கப்பட்டவர். சிறந்த ஆசானுக்குரிய பண்பு அவரிடமிருந்தது. தமது மாணவர்களுக்கு கற்பித்தலில் மட்டுமல்ல அவர்கள் நல்வாழ்க்கைக்கும் வழிகாட்டிய பேருள்ளங் கொண்டவராவார். மென்மைக்கும் வசீகர மொழிகளுக்கும் சொந்தக்காரர்.

இல்லற பந்தம் அன்னாரது மனம் போல இனிதே அமைந்தது. எழுதுமட்டுவாழ் முகமாலையைச் சேர்ந்த ஆசிரியரான கந்தையா பேரம்பலம் அவர்களுடன் 21.04.1961 இல் பதிவுத் திருமணமும் 20.08.1961 இல் விவாகமும் நடந்தேறியது. சிறந்த தம்பதியராக இறைவனின் ஆசியைப் பெற்று 50 வருடங்களை பூர்த்தி செய்த பாக்கியத்தைப் பெற்ற பெருமை அன்னாரைச் சாரும்.

ஆசிரியப் பணியுடன் இல்லறத்திலும் சிறந்து விளங்கிய அன்னாரது குல தெய்வமாக உசன் பதியில் குடிகொண்டு அனைவரையும் வாழ வைக்கும் தமிழ்கடவுள் முருகன் பெருமான் துணையானார்.

சிறப்புக்குரிய இல்லற வாழ்வின் முத்துக்களாக நான்கு பிள்ளைகளை பெற்ற பாக்கியம் இவருக்கு கிடைத்தது. முதல் பிள்ளை மகளாக துஷ்யந்தியும், பின்னர் மூன்று மகன்களாக அரவிந்தன், ரகுவிந்தன் மற்றும் வினோவிந்தன் என பெயர் சூட்டியும் அகமகிழ்ந்தது இந்த தாயினுள்ளம். தனது பிள்ளைகள் கல்வியில் சிறந்து விளங்க கண்ணுங் கருத்துமாக வளர்த்து, கற்பித்து அனைவரும் சிறப்பாக வாழ வழி செய்தமை இவ்வன்னை செய்த அரும்பணிகளாகும்.

மகள் துஷ்யந்தி பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாய பட்டதாரியாகி கரவெட்டியை பிறப்பிடமாக கொண்ட மிகுந்தனை மணமுடித்து, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் விவசாய இயந்திரவியல் துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராகி கலாநிதி துஷ்யந்தி மிகுந்தனாக பணிபுரிகிறார். இவர் கணவர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் கு. மிகுந்தன் அதே பீடத்தில் விவசாய உயிரியல்துறை பேராசிரியராக பணி புரிகிறார். இவர்களுக்கு மிதுறிகா, துமிலன், வக்ஷலன் எனும் மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

மூத்த மகன் அரவிந்தன், யாழ்போதனா வைத்தியசாலையில் மருந்தாளராக பணிபுரிகின்றார். இவர் உசனை பிறப்பிடமாக கொண்ட சோமினாவை திருமணஞ் செய்து சிறந்த இல்லற வாழ்க்கையின் பயனாக கேசவி, ஆரபி என்னும் இரு புதல்விகளை பேறாக பெற்றிருக்கின்றனர். திருமதி சோமினா அரவிந்தன் அவர்கள் திருநெல்வேலி யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாகப் பணி புரிகின்றார்.

இரண்டாவது மகன் றகுவிந்தன், மிருசுவில் வடக்கை பிறப்பிடமாகக் கொண்ட ரேணுகாவை மணமுடித்து அவர்களின் இனிதான இல்லற பந்தத்தில் ரஞ்சித் எனும் மகனை பேறாக பெற்று, புலம் பெயர்ந்து சுவிற்சலாந்து நாட்டில் வாழ்ந்து வருகின்றார்.

இளையமகன் வினோவிந்தன் திருநெல்வேலியை பிறப்பிடமாக கொண்ட கமலவேணியை மணமுடித்து, விகாஷ் எனும் மகனை தமது இல்லற பேற்றின் பயனாக பெற்றுள்ளனர். வினோவிந்தன் வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் ஆசிரியராக பணிபுரிகிறார்.

ஆசிரியப் பணியில் சிறந்து பணியாற்றிய அன்னார் இல்லற வாழ்விலும் சிறந்து விளங்கி நல்லாசானாக, அன்பு அன்னையாக, இனிய மனைவியாக, பாசமிகு மாமியாராக, அன்புகொண்ட பேத்தியாக, நல்ல உறவினராக வாழ்ந்து காட்டி, இறைபணியிலும் தம்மை ஈடுபடுத்தி சைவ உணவை உண்டு சீர்மிகு வாழ்ந்து, அனைவருக்கும் வழிகாட்டியிருக்கிறார். தான் வளர்ந்த கிராமமான உசன் பதியைப் பற்றி தமது கணவர் க. பேரம்பலத்துடன் இணைந்து வரலாறு சொல்லும் ஆவண பெட்டகமாக "வளங்கொழிக்க உளங்செழிக்கும் உசன் வரலாறு" என்னும் நூலை வெளியிட்டு வைத்தமை சிறப்புக்குரியது.

சிறப்பாக வாழ்ந்து வழிகாட்டிய குருவை, அன்னையை இந்நாளில் வணங்கி எல்லாம் வல்ல உசன் / முருகப் பெருமான் தமது திருவிழா கால சிறப்பு நாட்களிலேயே இவரது இன்னுயிர் 28.05.2012 திங்கட்கிழமை 4.00 மணிக்கு பிரிந்தபோது ஆட்கொண்டு அவர் திருவடிகளை இறுகப் பற்றிக் கொள்ள ஆசீர்வதித்திருப்பதை அன்னார் செய்த திருவருட் பேறாகவே கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரின் குருநாதர்கள்

தலைமை ஆசிரியர்
திரு. மு. சி. சிற்றம்பலம்

பண்டிதர் எஸ். கே. தம்பு



இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை



தத்துவஞானி பொ.கைலாயபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனையுரைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலப்படிப்பில் அக்கறை செலுத்த ஊக்கமளித்தவர் என் அருமைத் தங்கம்மா ஆசிரியர்.

தென்மராட்சியில் சிறந்த நல் ஊராகப் போற்றப்படும் உசன் ஊரில் பெயர் போன மூத்த நற்குடிகளாக வாழ்வாங்கு வாழ்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் (தங்கம்மா ரீச்சர்) இராமநாதன் மகாவித்தியாலயத்தில் 33 ஆண்டுகளுக்கு மேலாக ஆசிரியர் பணியைச் செய்து ஓய்வு பெற்றவர். இவருடைய காலத்தில் நானும் இப்பாடசாலையில் கல்வி பயின்றேன். அத்தோடு நில்லாது இங்கு கல்வி கற்ற காலத்தில் பல விழாக்களில் எம்மைப் பங்குபற்றுவதற்கு நெறிப்படுத்தி நான் பரிசில்களும் பெறுவதற்குக் காரணமாய் இருந்தவர். நாடகம், நாட்டியம் போன்ற கலைகளில் ஈடுபட்ட என்னை நல்லுரைகள் வழங்கி உங்கள் குருகுலப்படிப்பிலும் அக்கறை செலுத்த வேண்டுமென்று கூறி குருப்பணிக்கு ஊக்கமளித்தார். நான் இந்த நிலையில் இருப்பதற்கு ஓர் வழிகாட்டியாக இருந்தவர் இவர்.

பாடசாலையில் விளையாட்டு விழாக்களின் போதும் கலைநிகழ்வுகளின் போதும் தம்மை முழுமையாக ஈடுபடுத்தி பணியாற்றியமை எம்மால் மறக்க முடியாதன. அது மட்டுமல்ல ஓர் நல்லாசிரியருக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தவர். இதே நேரத்தில் தம் குடும்ப வாழ்விலும் பிள்ளைகளின் படிப்பு, நல்வாழ்க்கை அவர்களுடைய உத்தியோக உயர்வு போன்றவை இவரின் ஊக்கத்தால் இவர்கள் நல்வாழ்வு வாழ்கின்றார்கள் என்பதை என்றும் கண்கூடாகப் பார்க்கலாம்.

ஆகவே பிறந்தவர்கள் எவராவது ஒரு நாள் இறந்தே தீர வேண்டும் என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ள வேண்டும். இப்பூவுலகில் இருக்கும் வரை மற்றவர்களுக்கு தீங்கு விளைவிக்காமல் தான தர்மங்கள் செய்து இறைபணியாற்றி ஆன்மா சிவலோக வாழ்வு வாழ்வதற்கு அருளைப்பெற வேண்டும். இதுவே வாழ்க்கைத் தத்துவம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு ஆன்மா சிவப்பேறு அடைய எல்லாம் வல்ல இறை அருளை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

" லோகா சுகினோ பவத்து "

சிவஸ்ரீ .இ. சுந்தரேஸ்வரக்குருக்கள்
உசன் கந்தசுவாமி கோயில் குலகுருவும்
அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோயில்
ஆதீன கர்த்தாவும் சிவாச்சாரியாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்டார்.

" நெரு நல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

நேற்றிருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

28.05.2012 அன்று சிவபதமடைந்த திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்டார். அவர் பேரம்பலம் ஆசிரியரை மணந்து வீட்டுக்கு ஓர் நல்ல மனைவியாக வாழ்ந்தார். நல்ல மக்களைப் பெற்று அவர்களுக்கு நல்ல மருமக்களையும் சேர்த்து வைத்தார். பேரக் குழந்தைகளுடன் கொஞ்சி விளையாடி இனிமை கண்டார். வளமான குடும்பத்தில் வாழ்ந்து பெருமை கண்டார். இவர் பல ஆயிரக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய பெருமைக்குரிய நல்லாசிரியையுமாவார். இவரிடம் கல்வி கற்ற மாணவர்களில் யானும் ஒருவன் என்பதைச் சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகின்றேன். இவர் இறை பக்தியுடன் தமிழ் கலாச்சாரத்தையும் வளர்ப்பதில் நல்லாசிரியராக இருந்தார். அத்தகையவரின் நல் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சிவஸ்ரீ.இ.கேதீஸ்வரக்குருக்கள்
உசன் முருகன் தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சொற் செல்வரின் பிரார்த்தனையுரை

தென்மராட்சியில் கல்விப்பணியால் பெருமை பெற்றவர்களில் மதிப்பார்ந்த பேரம்பலம் அதிபர் தம்பதிகளுக்குத் தனித்துவமான மதிப்பும் மரியாதையும் இருப்பதை நான் நன்கு உணர்வேன். உசன் கிராமத்தின் கல்விப்பாரம்பரியம் தொடர்பாக உயர்திரு. பேரம்பலம் ஐயா அவர்கள் எழுதிய வரலாற்று நூல் வெளியீட்டு விழாவுக்குச் சென்றேன். விழாவில் இத்தம்பதிகள் பற்றிய பெருமை பலராலும் எடுத்துரைக்கப்பட்டது. கல்வியாலும் சேவையாலும் பெருமை பெற்ற இத்தம்பதிகள் எல்லாச் செல்வமும் பெற்று மகிழ்வாக வாழ்ந்தார்கள். பிள்ளைகளால் மருமக்களால் பேரப்பிள்ளைகளால் திருப்தி கண்ட நிலையில் குறைவின்றி நிறைவாக வாழ்ந்தார்கள். இக்குடும்பத்தின் மேன்மைக்குக் காரணமாக விளங்கிய (மனையகத்தின்) வேராகிய திருமதி. தெய்வானைப்பிள்ளை ஆசிரியையின் திடீர் மறைவு எதிர்பாராத நிகழ்வாக அமைந்து விட்டது.

காலன் தன் கடமையைச் செய்கிறான். பிரிவு தாங்காது யாவரும் துயர் கொள்வது இயற்கை. உறவின் வலிமை எவ்வாறு தைரியம் தருகிறதோ பிரிவின் துயர் உடல் உள வலிமையைப் பாதிப்பது இயற்கை. தன் பிரிய மனைவியை இழந்து தவிக்கும் பேரம்பலம் ஐயாவுக்கு ஆறுதல் சொல்ல இயலாது. தாயைப்பிரிந்து துயர் உறும் பிள்ளைகளுக்கு ஆறுதல் எல்லாமே சம்பிரதாயம் தான். பலரை வாழ்வித்த தங்கம்மா ரீச்சருக்கு மண்ணில் மட்டுமல்ல விண்ணிலும் நிச்சயம் மதிப்புண்டு. எனவே அன்னையின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திப்பது தான் எம் கடன். கடவுள் வாழ்வில் தந்த பெருமைகளுக்கு நற்சந்தர்ப்பங்களுக்குரியவராக வாழ்ந்த அம்மையார் பேறு பெற்றார்.

" யாவர்க்குமாம் என்றும் இன்னுரை தானே"

கலாநிதி.ஆறு. திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடை நெஞ்சம் தானகன்றதுவே

அமரர் பேரம்பலம் தெய்வானைப்பிள்ளை அவர்கள் எனது அருமைச் சகோதரியாவார். திருநெல்வேலி சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் யான் இரண்டாம் வருட மாணவியாகக் கற்ற பொழுது அமரர் அவர்கள் முதலாம் வருட மாணவியாக வந்து சேர்ந்தார்.

அமரர் அவர்கள் எப்பொழுதும் நிறைகுடம் போலவே காட்சியளிப்பார். ஆரவாரமற்ற சுவாபம், இனிமையாகவும் மென்மையாகவும் பேசும் பண்பு, அழகான தோற்றம், கல்வித்திறமை இவற்றைக் கொண்டவர்தான் அமரர் அவர்கள். பயிற்சி முடிந்து பின் வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையில் நியமனம் பெற்ற பொழுது நாங்கள் ஏழுபேர் பிரம்மச்சாரிணிகள். எங்களுக்குத் தாயாக விளங்கி எங்களுக்குப் பாதுகாவலராக இருந்தவர் அமரரின் அருமைத் தாயாரே.

சைவாசிரிய பயிற்சிக் கலாசாலை உப அதிபர் மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி B.Sc அவர்களிடமும், இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களிடமும் அமரர் பக்தி கொண்டு ஒழுகினார். அவர்களது ஆசீர்வாதத்தின் மகிமையாலேயே சகோதரர் பேரம்பலம் அவர்கள் அமரருக்கு கணவராகக் கிடைத்தார். அவர்களது திருமணம் காந்தர்வ திருமணம். அன்பும், அறிவும், அடக்கமும், பொறுமையும் பண்பும் கொண்ட ஆசிரியர் பேரம்பலத்தைக் கணவராக பெற்றமை அமரரின் முன்னைத் தவமேயாம்.

"தோகைக்கும் தோன்றற்கும் ஒன்றாய் இன்ப துன்பங்களே" என்னும் திருக்கோவையார்ச் செய்யுள் தொடருக்கு இருவரும் இலக்கணமாக வாழ்ந்தனர். இருவரும் ஒத்த கருத்தினர் ஆதலின் இருவர் பணியும் சிறப்புற்றமைந்தது. பதவியுயர்வுகள் பெற்று ஆசிரியர், அதிபர், உதவிக் கல்விப்பணிப்பாளர் என்ற பதவி உயர்வு நிலைகளை அடைந்து கணவனார் சிறப்புற்று விளங்குவதற்கு அமரர் அவர்கள் சிறந்த தூண்டுகோலாக விளங்கினார். தம்பதியர் இருவருமிணைந்த இல்லற வாழ்க்கையில் அருமை மகளையும் மூன்று ஆண்மக்களையும் பேறாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றெடுத்தனர். எல்லோரும் நன்கு கல்வி கற்று பெரிய பெரிய பதவிகளிலுள்ளனர். மருமக்களும் அவ்வாறே உள்ளனர். பிள்ளைகளின் கல்வியிலும் உடல், உள ஆரோக்கியத்திலும் சமுதாய அந்தஸ்திலும் உயர்ந்து விளங்குவதற்குத் தமது மனைவியார் ஆற்றிய பங்களிப்பை சகோதரர் பேரம்பலம் அவர்கள் பெருமையுடனும் நன்றியுடனும் அடிக்கடி பாராட்டிக் கூறுவார்கள்.

"நன்னிற் பிரியேன் பிரியில் தரியேன்" என்பது தமிழ் இலக்கியம் காட்டிய கூற்று. காலம் வந்தால் யார் தான் மீறமுடியும். அருமருந்தன்ன காதல் தம்பதியர் ஒத்த உணர்வுடைய உத்தமர்கள் பிரிந்து விட்டார்கள். இதுதான் விதி, இதுதான் உலக நியதி, இதுவே உண்மை நிலை. நமக்கும் அதுதான் வழி. "அன்புடை நெஞ்சம் தானகன்றதுவே" அம்மையினது ஆத்மா நித்திய சுகத்தை அடையப் பிரார்த்திப்போம். அமரரை இழந்து துயருறும் யாவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்கள் உரியதாகுக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பண்டிதை திருமதி பொன். பாக்கியம்,
ஓய்வு நிலை ஆசிரியை,
இலக்கிய கலாநிதி பண்டிதமணி
சி.கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச்சபைத் தலைவர்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்வாழ்வின் இலக்கணமாய்த் திகழ்ந்த மாதரசி தெய்வானைப்பிள்ளை

நல்லாசிரியை திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்கள் இம்மண்ணில் இப்போது இல்லை என்ற உண்மை ஜீரணிக்கக்கூடியதல்ல.

உலகில் இருக்கக்கூடிய துயரங்கள் குறித்த அளவீடுகள் இருக்குமாயின் எம்மோடு இருந்தவரை இழந்துபோன துயரம் தான் ஆகக்கூடிய துன்பம் தருவதாகும். அவ்வகையில் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்களின் மறைவு எங்கள் மரியாதைக்குரிய பேரம்பலம் ஐயாவிற்கு ஏற்பட்ட இழப்பினூடு நமக்கும் துன்பம் தருவதாகும். இல்லறத்தின் உயர் சால்புக்கு இலக்கணமாக உயர் திரு பேரம்பலம் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்களின் குடும்பத்தை நாம் நினைப்பதுண்டு.

எவருக்கும் உதவி செய்கின்ற பக்குவம், எவரையும் நிந்திக்காத உயர்ந்த உள்ளம், ஆசிரியத் தொழிலை தெய்வீகப்பணியாகக் கருதும் பண்பு, தமிழ்ப்பாரம்பரியத்தின் அடையாளமாகப் புகழுடன் தோன்றும் பாங்கு என்பன பேரம்பலம் ஐயாவின் பண்புடமை.

அவரின் இத்தகைய பண்புடமைகள் இம்மியும் குறையா வண்ணம் காத்த பெருமை அவரின் இல்லத்தரசி திருமதி. தெய்வானைப்பிள்ளை அம்மாவையே சாரும். ஆசிரியத்தம்பதிகள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டுவதற்குரிய அத்தனை சிறப்பம்சங்களும் பேரம்பலம் ஐயாவின் குடும்பத்தில் உண்டு.

உயர்ந்த கல்வியும் அறத்தின் வழியீட்டிய பொருளும் செல்லும் இடமெங்கும் சிறப்பும் தெய்வீகத் தன்மையும் கொண்டமைதல் என்பது யார்க்கும் பொருந்துவதில்லை யாயினும் பேரம்பலம் என்னும் பெரியார்க்கு அவை வாய்த்தன என்பதை இவ்விடத்தில் கூறித்தான் ஆகவேண்டும்

இவ்வாறாக எல்லாச்சிறப்புக்கும் காரணமாக இருந்து நிறைவாழ்வு வாழ்ந்த மாதரசி தெய்வானைப்பிள்ளை அவர்கள் இன்று நம் மத்தியில் இல்லையாயினும் அவரின் செயற்கரிய செயல்கள் நம்மோடு வரலாறாகிக் கொள்ளும்.

அத்தகைய உயர்ந்த பேற்றுடைய அன்னை தெய்வானைப்பிள்ளை அவர்களின் தூய ஆத்மா எல்லாம் வல்ல உசன் கந்தப்பெருமானின் திருவடிகளில் பேரின்பப் பெருவாழ்வு பெற அவன் தாள் பணிகின்றோம்.

இறப்பு ஒன்றுதான் மனிதனின் பிறப்புரிமை என்ற நிஜங்களோடு அன்னையின் தூய ஆத்மா எங்களை என்றும் ஆசீர்வதிக்கும் என்ற நம்பிக்கையோடு அவரின் இழப்பால் ஏற்பட்ட துயரங்களை ஆற்றிக்கொள்வோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்.விஜயசுந்தரம்
பிரதம ஆசிரியர்
வலம்புரி நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவலைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இதயம் கவர்ந்த தெய்வத்தாய் திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் (தங்கம்மா ரீச்சர்) - ஓய்வுநிலை ஆசிரியர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

ஈழமணித்திருநாட்டின் முத்தெனத் திகழும் யாழ்ப்பாணத்தின் தென்மராட்சியினிலே தென்னைபனையுடன் இன்னறுங்கனிச் சோலைகள் நிறை உசன் பதியில் சிவபுரியை வதிவிடமாகக் கொண்டு இல்லற வாழ்க்கையிலே இனிதே மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளைக் கண்டு அமுதூட்டிச் சிறப்புற வாழ்ந்து வந்தவர் அன்னை அவர்கள். மேலும் இவர் எல்லோர் மனங்களிலும் தங்கம்மா ரீச்சராகவும் உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களுக்கு குருவாகவும் விளங்கி அவர்களுக்கு அறிவூட்டி நல்லாசனாகத் திகழ்ந்திருக்கின்றார்.

10.07.1937 இல் இப்பூமியில் காலடி பதித்து தனது கல்வியை S.S.C தமிழ் மொழி மூலம் யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் ஆங்கில மொழி மூலம் S.S.C கல்வியை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் பெற்றிருக்கின்றார். அத்துடன் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையிலே 1957 – 1958 வரையான காலப்பகுதியில் ஆசிரியத்துவப் பயிற்சியைப் பெற்று 02.11.1959 இல் வவுனியா சைவப்பிரகாச வித்தியாசாலையிலே மாணவச் செல்வங்களுக்கு கல்வி ஒளியை ஊட்டுவதற்காகக் காலடி பதித்தார். 01.03.1963 தொடக்கம் 09.07.1995 வரை உசன் இராமநான் மகா வித்தியாலயத்திலே தனது ஆசிரியப் பணியில் 34 வருடங்களைப் பூரணத்துவம் செய்து 10.07.1995 இல் தனது 58வது அகவை நிறைவில் அரச சேவையிலிருந்து இளைப்பாறி இருக்கின்றார். ஓய்வுக் காலத்தையும் பயனுள்ளதாக்கி தனது பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் தனது ஊரின் அபிவிருத்திக்குமாக அக்கறையுடன் அரும்பாடுபட்டுள்ளார்.

அன்னையவர்களது மறைவு எம்மை வாட்டினாலும் அவரது வழித் தோன்றல்கள் மாணவர்கள் அன்னையினது வழிகாட்டல் பிரகாரம் வாழ்ந்து அன்னையினது பணியை பறை சாற்றி அவரது புகழ் இன்று போல் என்றும் நிலைத்திருக்க வழி சமைப்பிப்பார்கள் என்பது திண்ணம். திருவாளர் பேரம்பலம் ஐயா அவர்கள் (அதிபர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) தனது துணைவியார் இறைவனுடன் இரண்டறக் கலந்தமையையிட்டு கலங்கினாலும் துவண்டுவிடாது பிள்ளைகளை குடும்பத்தினரை வழிநடாத்தும் மனத் தைரியத்தையும் பாதுகாப்பையும் ஆசிகளையும் இறைவன் அவருக்கு வழங்க வேண்டுமென வேண்டி அன்னையினது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் ஆறுதல்கள் கூறி நிற்கின்றோம்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் - வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

திரு.திருமதி. சாந்தசீலன் குடும்பத்தினர்
பிரதேச செயலர்
தென்மராட்சி

செயலாளர்
பிரதேச சபை
நல்லூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அம்மா

கவலையுடன் எழுதுகின்றேன். என்னில் மிகவும் வயது குறைந்தவர் ஆசிரியை அம்மா. இன்று எம் மத்தியில் இல்லை. இரத்த உறவுக்கும் மேம்பட்ட இனிய உறவு. முப்பத்தொன்பது வருடங்கள். நண்பர் பேரம்பலம் அம்மா அவர்களது அன்பு அப்படி. இது ஒரு முற்பிறப்பின் தொடர்பு.

அம்மாவை இழந்து கணவர், பிள்ளைகள், மருமக்கள், உறவினர், நண்பர்கள் உசன் வாழ் மக்கள் அடைந்த வேதனை அன்று நீங்கள் யாவரும் அறிந்தவை. நீங்காத் துயரம் உயிர் இருக்கும் வரை போகாது. அம்மாவின் வாழ்வும், அறிவும், செயலும், அன்பும், ஆதரவும் அப்படி. கடைசிவரை கம்பீரமும், மிடுக்கும், குறையாமல் உள்ளதால் பொய்யாது ஒழுக உலகத்தார் உள்ளத்தில் இடம்பிடித்தவர். செய்யும் தொழிலே தெய்வம் என்று ஆசிரியைத்தொழிலை நேசித்தவர். எழுபத்தைந்து ஆண்டுகள் எம்முடன் வாழ்ந்து, பூவோடும், பொட்டோடும் சுமங்கலியாக இறுதிப்பயணத்தை முடித்துக் கொண்டவர்.

நண்பர் பேரம்பலம் அவர்கள் ஆசிரியராய், அதிபராய், கல்வி அதிகாரியாய் கல்வி அறிவாலும், விடாமுயற்சியாலும் உயர்ந்தவர். அம்மா, கச்சாயிலும் நண்பர் முகமாலையிலும் பிறந்தவர்கள். இருந்தும் தாயாரின் உசன் கிராமத்தில் இல்லம் அமைத்து சீரும் சிறப்பாகவும் வாழ்ந்தவர்கள்.

மிகவும் அழகான கிராமம் உசன். கண்டி வீதியிலிருந்து அதன் இயற்கையின் எழிலை ரசிக்க வேண்டும். பரந்த வயல் கரம்பகம் வரை. மாரிகாலம் நீர் உயர நெல் உயர்ந்தது. அதுபோல் அசைவு பரந்த வெளியில் பார்ப்பதற்கு இன்பம் தான். கண்டி வீதியிலிருந்து ஒரு பாதை, தென்னை பலா, மாஞ் சோலைகள், விடத்தல்பளை வரை இயற்கை அழகு. கண்ணுக்கு இனிமை நிலத்தின் இயல்பில்தான். பயிரின் தன்மை குறையாத விளை பொருளும் அறிஞரும், அளவற்ற செல்வமும், செல்வந்தரும் பெற்ற கிராமம் உசன்.

நண்பர் பேரம்பலம் அவர்கள் வளம் கொழிக்க உளம் செழிக்கும் உசன் வரலாறு படைத்தவர். உசனை உலகறியச் செய்தவர். விலை போட்டு விற்பனைக்கல்ல, மாபெரும் ஆராய்ச்சி நூல். சர்வகலாசாலை கலாநிதிப்பட்டத்துக்குப் பொருத்தமானது. அவரின் அறிவின் பிரதிபலிப்பைக் காட்டியது.

அம்மாவின் தூண்டுதலும், ஊக்கமும் கணவர் உயர்ச்சிக்கு உந்து சக்தி. வீட்டையும், நாட்டையும், உலகத்தையும் உருவாக்குபவர் பெண்கள். சந்ததி உருவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்புணர்ந்து ஆசையையும், உள் ஒளியையும், அன்பையும், அறத்தையும் கொடுத்து வீடு சிறக்கச் செய்தவர் அம்மா.

தான் பெற்ற கல்வி மாணவர்களின் உன்னத செயற்பாட்டுக்கும், நல்ல சிந்தனைக்கும் உதவவேண்டும் என்று தன்நலம் ஆற்றாது இவரது ஆசிரியப் பணி. தாய், நீதி, நேர்மை, ஒழுக்க நெறிகளை மேற்கொண்டால், குழந்தைகளும் கற்றுக்கொள்ளும். கல்வியில் உயர்ந்து கலாநிதிகளாகக் கண்டு இன்புற்றவர்.

ஆரம்பக்கல்வி கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும், இடைநிலை கல்வியை உசன் மகாவித்தியாலயத்திலும், ஆசிரியையாக விரும்பி திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சி பெற்றார். அதிபர் கந்தையா, கலாநிதி பண்தமணி கணபதிப்பிள்ளை, சைவ சித்தாந்த கயிலாயபதி, கணித ஆசான் செல்லத்துரை இவரது விரிவுரையாளர்கள். சிறந்த கல்வியையும், ஆசிரிய பயிற்சியையும் முடித்து வவுனியா சைவப்பிரகாச வித்தியசாலையில் ஆசிரியை ஆகிய பின் உசன் மகாவித்தியாலயம் முப்பத்திநான்கு ஆண்டுகள் ஒய்வு பெறும் வரை.

அன்பான, பண்பான சேவைமனப்பான்மை கொண்டு பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வி கொடுத்து, நல்வழிப்படுத்தி அவர்களை மனிதர்களாக்கி பெருமை கொண்டவர். பாடசாலை நிர்வாகத்தில் அதிபர்களுக்கு உறுதுணையாக இருந்து பாடசாலை உயர்வில் பெரும் பங்கு கொண்டவர்.

நாற்பத்தொன்பது வருடங்களுக்கு முன் சாவகச்சேரி கல்வி வலய அதிகாரி. அறுபத்தெட்டு பாடசாலைகள். பண்பான அதிபர்களையும் அறிவு ஆற்றல் மிக்க ஆசிரியர்களையும் கல்வியில் விருப்பம் கொண்ட மாணவர்களையும் கண்டேன்.

கல்வி அதிகாரியாக உசன் மகாவித்தியாலயம் சென்றேன். அதிபர் ஒரு பெரிய கல்விமான். மாணவர்கள் நலன் நோக்கும் சிறந்த கல்வி அறிவும் கொண்ட ஆசிரியர்கள். அன்று திருமதி பேரம்பலம் அவர்களை அதிபர் அறிமுகம் செய்து வைத்தார். எட்டு ஆண்டுகள் இவரது கல்வி சேவையை அவதானித்தேன். ஆயிரக் கணக்கான மாணவர்களுக்கு இவரின் அன்பும், அறிவும், நல் ஒழுக்க நெறிமுறைகளும் கிடைத்தன.

அம்மா ஆசிரியராக இருந்த கடைசிக் காலம் கணவர் ஒரு கல்வி அதிகாரி. உசன் மகாவித்தியாயத்தில் ஆசிரியர்களின் சேவை மதிப்பீட்டு நாள். மனைவியின் ஆசிரிய தராதரப் பத்திரத்தில் ஐந்து ஆண்டுகளுக்குரிய பதிவுகளை மிகவும் திருப்தியான சேவை எனப் பதிவு செய்து கணவன் ஒப்பமிட்டார். வியக்கத்தக்க நிகழ்வு.

சேவைக்கால முடிவில் கணவரிடமிருந்து பெற்ற பாராட்டு. நானும் கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகாரிதான். எனக்கும் இதில் ஒரு வியப்புத்தான். தாயாரின் கல்விப் பணியை தந்தையார் பாராட்டி மிகவும் திருப்தியான சேவை எனப் பதிவு செய்து ஒப்பமிட்டது பிள்ளைகளுக்கும் மருமக்களுக்கும் பெரிய மகிழ்ச்சி. இது நடப்பது அருமை.

போர்க்காலத்தில் நாங்கள் அகதிகள். சாவகச்சேரி மக்களின் ஆதரவு கிடைத்தது. போர் உச்சம். எறிகணைத் தாக்குதல். ஓடினோம், ஓடினோம் உசன்தான் .... நண்பர் பேரம்பலம் இல்லம் நோக்கி அங்கும் பல அகதிகள். அம்மா, பிள்ளைகள் அன்புடன் ஆதரித்தார்கள். உறைவிடம், உணவு கிடைத்தது. அகதிகளால் அவர்கள் வாழ்வில் பெரிய பாதிப்பு. முகம் கோணவில்லை. தியாகம் பெரிது. எல்லோர் அன்புக்கும் நன்றி உடையோம்.

பிள்ளைகள் திருநெல்வேலிக்கு இடம்பெயர்ந்தார்கள். வசதியான இல்லங்களை அமைத்து தாய் தந்தையரையும் இணைத்துக் கொண்டார்கள். பிள்ளைகளின் இல்லம் பலமுறை போயுள்ளேன். அதே அன்பும் உபசரிப்பும் தான். மகனின் வீட்டு சூழல் வாழை, கமுகு, பலா, மா பழமரங்களால் அழகு பெற்றது. ஓய்வு காலம் கணவன் பிள்ளைகள், மருமக்கள் பேரப்பிள்ளைகளுடன் குதூகலமாக வாழ்ந்தார் அம்மா. எதிர்பாராத இழப்பு. கவலை போக காலம் உதவும். அம்மாவின் அன்பும் ஆசையும் கவலையும் பேரம்பலத்தில் நிம்மதி கொள்ளும்.

சி.இராசநாயகம்
ஓய்வுநிலை கல்வி அதிகாரி.
(முன்னை நாள் சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் சொந்தப் பிள்ளைகளைப் போல் தான் கற்பித்த பிள்ளைகளையும் நேசித்தவர் தங்கம்மா ரீச்சர்

உசன் மண்ணிற்குரிய எளிமை, பணிவு, விடாமுயற்சி, பரந்த உள்ளம், கடமையுணர்ச்சி, தெய்வபக்தி, ஊர்ப்பற்று முதலிய நற்பண்புகளுடன் வாழ்ந்தவர் "தங்கம்மா ரீச்சர்" என எல்லோராலும் அழைக்கப்பெற்ற திருவாட்டி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம். 1969ஆம் ஆண்டில் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஓர் ஆசிரியனாக நான் பணியாற்றத் தொடங்கியதற்கு முன்னரே அவ்வித்தியாலயத்தின் ஆசிரியர்களுள் ஒருவராக இணைந்து கொண்ட அவர், பிரதி அதிபராகவும் அதிபராகவும் நான் அங்கே கடமையாற்றிய காலத்திலும், 1983ஆம் ஆண்டில் வைத்தீஸ்வராக் கல்லூரியின் அதிபராக நான் நியமிக்கப்பட்ட பின்னரும் தொடர்ந்தும் பல்லாண்டுகள் இராமநாதன் மகா வித்தியாலயத்திலேயே தன் கல்விப் பணியை நிறைவேற்றியவர். அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் தன் சொந்த ஊரிலுள்ள பாடசாலையில் நீண்டகாலம் ஆசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை. பொறுப்புணர்ச்சி நிறைந்த ஓர் ஆசிரியையாகவும், இணைபாடச் செயற்பாடுகளில் எழுச்சியுடன் கலந்துகொண்டவராகவும் பாடசாலை நிர்வாகத்துடன் மனப்பூர்வமாக ஒத்துழைப்பவராகவும் என்றும் விளங்கியபடியால், அந்த வாய்ப்பு, தங்கம்மா ரீச்சருக்குக் கிட்டியதில் வியப்பேதுமில்லை.

ஆசிரியராக இருந்து, படிப்படியாகப் பதவி உயர்வு பெற்று அதிபராகவும், உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியதுடன் உசன் கிராமத்தின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் பாரிய பங்களிப்பை இவருடைய கணவர் திரு. க. பேரம்பலம் வழங்கினார் என்றால் அவருடைய அந்தத் தன்னலமற்ற பணிச்சிறப்புக்கும் புகழுக்கும், இவர் வழங்கிய உதவியும் ஊக்கமும் ஒத்துழைப்புமே பெருமளவிற் காரணம் என்பது மிகையன்று.

நல்ல மனைவியாக மட்டுமல்லாமல் பாசம் மிகுந்த ஒரு தாயாகவும், தாய்மை வளர்ச்சி நிறைந்த ஓர் ஆசிரியையாகவும் இவர் திகழ்ந்த காரணத்தால், இவர் பெற்ற பிள்ளைகள் மட்டுமல்லாமல், இவரிடம் கற்ற பிள்ளைகளும் வாழ்க்கையில் உயர்ந்த நிலையில் இருப்பதைக் காண்கின்றோம்.

முழுமையான வாழ்வு வாழ்ந்த தங்கம்மா ரீச்சர் விட்டுச்சென்ற நினைவுகள் ஆரோக்கியமானவை, மறக்க முடியாதவை. அவருடைய ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சிவசரவணபவன் (சிற்பி)
முன்னாள் அதிபர்.
உசன் இராமநாதன் ம.வி

கந்தரோடை
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்தார் பெருமை

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்ட திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் ஆசிரியை பற்றி ஒரு கணம் சிந்தித்துப் பார்க்கின்றேன்.

மெலிந்த உருவம், கனிவான பேச்சு, புன்முறுவல் பூத்த முகம், எதையும் ஆழமாகச் சிந்தித்துச் செயலாற்றும் திறன். இவையே அவரை எல்லோர்பாலும் ஈர்த்த விடயங்களாகும். ஒரு நல்ல ஆசிரியருக்கு இலக்கணமாகத் திகழ்ந்து பாடசாலையில் தனது கடமையைச் சரிவர நிறைவேற்றியவர். வீட்டில் நல்ல மனையாளாக, அன்புத் தாயாக, அருமைப் பாட்டியாகத் தன் கடைசி மூச்சு வரை பாடுபட்டவர். ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் எப்போதும் ஒரு பெண் இருப்பாள் என்பர். திரு. பேரம்பலம் அவர்கள் கல்வி நிர்வாகத்துறையில் படிப்படியாக உயர்ச்சி பெற்றதற்குரிய காரணம் அவர் மனைவியின் உந்து சக்தியேயாகும். அன்னாரின் மறைவு அவரின் குடும்பத்திற்குப் பேரிழப்பாகும். இவரின் பிரிவால் கலங்கும் அன்புக் கணவர். பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் சகல குடும்ப அங்கத்தவர் களுக்கும் எனதும் என் குடும்பத்தினரதும் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

83, பலாலி வீதி,
திருநெல்வேலி.

திரு.பொ.சிவகுருநாதன்
கல்விப் பணிப்பாளர்
(ஓய்வுநிலை)

தோல்விகள் நிரந்தரமானவை அல்ல
அவை வெற்றியின் படிக்கற்கள் ஆகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மா என் (தெய்வ) ரீச்சர்

என் வாழ்க்கைக்கு வழிகாட்டிய ஆசிரியர்களுள் அமரர் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் ஆசிரியரும் ஒருவர். அவர் தங்கமான ரீச்சராக வகுப்பறையில் செயற்பட்டதால் அவரை தங்கம்மா ரீச்சர் என்றே பலரும் அழைப்பர். ஆயிரத்து தொளாயிரத்து எழுபதாம் ஆண்டு காலப்பகுதியில் நான் தென்மராட்சி உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் க.பொ.த (சா/த) வகுப்பில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு சைவசமயம், எண்கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பித்தவர் அமரர் தங்கம்மா ரீச்சர். ஆசிரியர் வகுப்புக்கு வருவதென்றால் வகுப்பு மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் இருக்கும். அவரது கற்பித்தல் நுட்பமும் விடயங்களை மாணவர் மனதில் பதிய வைக்கும் ஆற்றலும் அளவிடமுடியாதவை. இன்று கல்வித் துறையில் கற்பித்தலியலில் பல்வேறு பட்டங்களைப் பெறும் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் அவற்றைப் பிரயோகிக்கின்றார்களா என்பது விவாதத்துக்குரிய விடயம். இவர்களுக்கு முன்னால் தங்கம்மா ரீச்சர் ! ஆம் அவர் உண்மையில் என் தெய்வ ரீச்சர்.

மாணவர்களாகிய எம் மீது அவர் காட்டிய அன்பு, பாசம், கருணை, இரக்கம் .... அப்பப்பா அவர் மனிதர்களாக்கிய உத்தமர்1 வகுப்பறையில் மாணவர்கள் சில பாடங்களை விரும்பிப் படிப்பார்கள். அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றுள் கற்பிக்கும் ஆசிரியர் மீது கொண்டிருக்கும் பற்றும் ஒன்று. என்னைப் பொறுத்தவரை சைவசமயம், எண்கணிதம் ஆகிய பாடங்களை நான் விரும்பிப் படிப்பதற்கு தங்கம்மா ரீச்சர் தான் ஆணிவேர். அவர் கற்பித்த இரு பாடங்களிலும் நான் சாதாரணப் பரீட்சையில் விசேட சித்தியைப் பெற்றுக் கொண்டேன். அவர் இன்று எம்முன் இல்லாவிட்டாலும் எம்மை வழிப்படுத்திக் கொண்டே இருக்கின்றார்.

இச்சந்தர்ப்பத்தில் அமரர் அவர்களின் கணவர் திரு. பேரம்பலம் ஆசிரியர் (பின்னாளில் உதவிக் கல்விப் பணிப்பாளர்) அவர்களைப் பற்றியும் எம் மனம் இரை மீட்கின்றது. அவரிடம் நான் விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் கல்வி கற்றிருக்கிறேன். அவரது கண்டிப்புடன் கூடிய கற்பித்தலும் அரவணைப்பும் அக்கிராமத்தையே வலுவடையச் செய்தது என்றால் மிகையாகாது .

எனவே என்னைப் பொறுத்தவரை அமரர் அவர்களும் அவரது கணவரும் என் கல்விக் கண்ணைத் திறந்த உத்தமர்கள். இவர்களை என் வாழ்நாளில் எப்படி மறப்பது? தங்கம்மா ரீச்சரின் இழப்பு உசன் கிராமத்துக்கும் கல்வி உலகுக்கும் பேரிழப்பாகும். " ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநிலத்து......." என்ற வரிகளை மனதிலிருத்தி ஆறுதல் அடைவோமாக. அமரரின் பிள்ளைகள், மருமக்கள், கல்வி உலகுக்கு யாழ் மண்ணுக்கு இன்று கல்விச் சேவையாற்றிக் கொண்டிருப்பது அமரரின் இழப்பை ஓரளவு ஈடு செய்து கொண்டிருக்கின்றது.

அமரரின் பிரிவால் துயரடைந்துள்ள கணவர் என் ஆசான் மற்றும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர் அனைவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

அமரரின் ஆன்மா இறைவன் திருப்பாதங்களைப் பற்றிக் கொள்ள பிரார்த்திப்போமாக.

" ஓம் சாந்தி ! சாந்தி! சாந்தி!!!

இ.குணநாதன்
(அமரரின் மாணவர்)
பிரதிக்கல்விப் பணிப்பாளர்
யாழ் கல்வி வலயம்
யாழ்ப்பாணம்.

மனித வாழ்வில் ஜனனம் மரணம் என்பது
ஒரு பொழுதின் காலையும், மாலையும் போன்றது
காலத்தின் கரைவுகளில் இழப்புக்கள்
என்பது தீர்மானமானவை.
ஆனால் எளிதில் ஜீரணமாகாதவை.
இப்புவியில் வாழும் காலத்தில்
இனியவற்றை செய்து வாழ்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

United People Association of Usan in Canada

உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம் -கனடா

உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம் கனடா

உசன் மக்கள் உள்ளத்தில் உறைந்து விட்ட உறவு...
காந்த குரலால் கவர்ந்து கவி வடித்த அன்னை...
பாசம் பொழிந்து பக்குவமாய் வளர்த்த தாய்...
பாரினில் இருந்து பறந்து போனது நிஜமா?????

காதினில் கேட்ட செய்தி பொய்யாகி போகாதா??
பாரினில் வாழும் வரை பார்க்க வேண்டும் உங்கள் முகம்
கேட்க வேண்டும் உங்கள் குரல்...
சைவத்தை உசனில் விதைத்த ஊற்றே...
உங்கள் வளர்ப்பினால் நாம் உலகெல்லாம் வாழ்கிறோம்....
உலகெல்லாம் உங்கள் நினைவிருக்கும்...

அன்னையின் மறைவு கேட்டு நாம் ஆழ்ந்த துயருற்றோம்...
ஒரு நாள் ஊர் வருவோம் உங்கள் முகம் காண்போம் என
வாழும் வாழ்க்கையில் நாங்களும் ...
எப்போ வருவார்கள் எப்போது காண்போம் என நீங்களும் வாழ்வது
எமக்கு விதித்த விதி போலும்...
மரணத்தின் விபரத்தை எமக்கு விபரமாய் போதித்த
ஆசான் ... தங்கம்மா ரீச்சரின் மரண செய்தி??????
மரணத்தை மறுக்க முடியாத பிறவிகள் நாம்...
வாழ்ந்த வாழ்க்கையின் நினைவுகளை நிலைநிறுத்தி...
உங்கள் நினைவுகளோடு உலகெல்லாம் வாழ்கிறோம்....
உங்கள் ஆத்மா சாந்திக்காய் வேண்டுகிறோம்...

கனடா உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியம்

25 Royal Crown Rd, Markham, ON L6E 1S3, Canada. Tel:647-547-8817 e-mail:editor@usan.ca

www.usan.ca -Facebooke: usanpeople

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையே ! தங்கமே!

பேரழகுத் தங்கம், பெருமை சேர் மாணிக்கம்
ஊர் சிறக்க உழைத்தோய்ந்த உத்தமரே
கார் மேகமென கருணை பொழி மாதரசி
வேர் கொண்டு நல்லுணர்வு விளைந்திங்கு உயர்ந்திட

பார் சிறக்கும் கல்விப் பணியாற்றி எந்நாளும்
பேர் புகழ் கொண்டு பெருமை தந்தாய்
பேரம்பலத்தார் பீடு நடை போட்டுயர காரணராய்
பெண்மைக் கிலக்கணம் பேணிக் காத்தாய்

ஓயாத புன்சிரிப்பு வதனம்
உள்ளென்று கரவா உள்ளம்
தன்னலம் மறுத்த தளிர் கரங்கள்
தவித்தோர்க்குதவ நாடும் கால்கள்
வரவு காத்தோம்பும் வள்ளன்மை
உறவு பொலிய வைக்கும் உரையாடல்
உண்மைக்கு வாதாடும் வலிய நெஞ்சம்
அத்தனையும் கண்டு அகமகிழ்ந்தோம்
அன்னையே ! தங்கமே ! உம் வழி மறவோம்

உசன்
மிருசுவில்.

யோ. யோண்பிள்ளை
ஓய்வுநிலை
உதவிக்கல்விப்பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா ரீச்சர்)

அமரர் தெய்வானைப்பிள்ளை யா/உசன் இராமநாதன் மகா விதிதயாலயத்தில் கல்வி பயின்று இப் பாடசாலையிலே பணியாற்றி ஓய்வு பெற்ற பெருமைக்குரியவர்.

02.11.1959 இல் வவுனியா சைவப்பிரகாசா வித்தியாசாலையில் நியமனம் பெற்ற இவர் 01.03.1963 இல் யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுவந்து 10.07.1955 ம் ஆண்டுவரை 32 வருடங்கள் 04 மாதங்கள் 09 நாட்கள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் சென்றவர்.

கல்விப் புலத்தில் இவர் ஆற்றிய பணிகள் சொல்லற்கரியன. ஆரம்பக் கல்வி ஆசிரியராக நியமனம் பெற்ற இவர் இடைநிலைக் கல்விக்கும் தனது பணிகளை ஆற்றிப் பெருமை சேர்த்த சிறப்பாசான். சின்னஞ்சிறுவர்களை பாசத்துடன் அரவணைத்து கல்விபுகட்டி அன்பு, கருணை, ஈகை உணர்வுடன் வழிகாட்டியவர். இடைவேளைக்குப் பின்னர் இடைநிலை வகுப்புக்களுக்கு சுகாதாரம், சைவசமயம் ஆகிய பாடங்களையும் போதித்து புகழ் ஈட்டிய ஆசான்.

இவ் வித்தியாலயத்தில் சைவசமயமும் தமிழும் தழைத்தோங்கும் கலாசாரத்திற்கு அன்னாரது அறப்பணி கலங்கரைவிளக்காக விளங்கும் என்பது எமது ஆதங்கம் ஆகும்.

இவரிடம் கல்வி கற்ற ஆயிரக்கணக்கான மாணவர்கள் இன்றும் உரிய பதவிகளில் பணியாற்றி வருகின்றமை அவரது நற்சேவைக்கான குறிப்புக்களாகும். இவர் மறைந்தும் மங்காப் புகழுடன் என்றென்றும் எம் நெஞ்சங்களில் வாழ்வார் என்பது எமது திண்ணம்.

அதிபர்
சி.மனோகரன்
யா/உசன் இராமநாதன் ம.வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டேன் அன்னையை

பள்ளித் தலத்தில் :
நல்லாசிரியை

அன்னை போல் எம் ஆசிரியையாய் அமைந்தாயே
பிள்ளைகள் பிரச்சினையை பிரியமுடன் சுமந்தாயே
தெய்வதரிசனமாய் பள்ளியிலே பற்று வைத்தாயே
கைகூப்பி வணங்கிடவே கற்றுத் தந்தாயே
அடாவடி அதிபர்களை ஆளுமையால் அதிரவைத்தாயே
அன்பாலே ஆசிரியர் ஆளுமையை உணரவைத்தாயே
சின்னச் சின்ன கதைகள் சொல்லி சிரிக்க வைத்தாயே
சிரிக்க வைத்தே சிந்தனையை சிறக்க வைத்தாயே
அன்பு அறிவு ஆற்றலை விதைத்து வைத்தாயே
பண்பு பணிவு நற்பழக்கங்களை மனதில் பதிய வைத்தாயே
படித்தது மறந்தாலும் விதைத்தது விளைய வைத்தாயே
மனிதனை மறக்காமல் மதிக்க வைத்தாயே
மானுடத்தை எண்ணி மகிழ வைத்தாயே
நற்பிரசைகளாய் நம்மை ஆக்கி வைத்தாயே
நன்றியோடு மனந்திறந்து மண்டியிட்டு வணங்குகின்றோம்– தாயே

இல்லக் கோயிலில் :
இல்லத்தரசி

மணாளனை மகிழவைத்த மலர்க்கொடியே
மக்களை மடியிருத்தி மயங்க வைத்த மாதாவே
மருமக்களை மாண்புறச் செய்த மனைவிளக்கே
அயலாரை ஆறுதல் செய்த அன்பரசி
உதவி கேட்டு வந்தவரை உபசரித்த உத்தமியே
பேரரைப் பெருமை செய்த பேரரசி
இல்லத்தில் இனிமை சேர்த்த இல்லாளே
அன்னை முகம் அன்பு முகம் அழகு முகம் ஆசை முகம்
பின்னை அவள் பாசமெல்லாம் பேசும் முகம்
ஆயிரம் முகம் ஆயிரம் கதை பேசுதம்மா
ஆரிடம் இனி அதை கேட்பதம்மா
காலத்தில் கிட்டாத கணவனைக் கைப்பிடித்த காதல் திருமகளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலைகள் சூட மாபெரும் சபை தேட மக்களைப்பெற்ற மகராசி
மார் தட்ட பேர் பெற்ற ஊர்மெச்சும் மருமக்களைக் கண்ட மாதரசி
பேர் பெற்று பேர் சொல்லும் பேரரைப் பெற்ற பெருமகளே
ஆர்பெறுவார் அம்மா இந்த அரியாசனம்
ஊர் பெறுமா தாயே உன்னோடு சரியாசனம்
நீர் இருந்து நான் இறந்து நீர் தனித்துப் போகாமல்
நான் இருந்து நீர் இறக்க வேண்டுமென்று
இல்லாள் இறைவனிடம் இனிய வரம் கேட்பாளாம்
அந்த வரம் தந்து விட உசன் கந்தன் அவன் நொந்து விட
நிறைந்த வாழ்வில் தான் கண்ட நீரோசைகள்
உறைந்து போய்தன் உள்ளமெல்லாம் உருகும் உன் துணைவன்
வெந்து மனம் நோகாமல் நொந்து உடல் போகாமல்
சொந்த பந்தம் சோராமல் சோகமதை நாடாமல்
முந்தை வினை தீர கந்தன் அடி சேர
சொந்தமதை எண்ணி வந்தனைகள் செய்து
வணங்குகிறோம் தாயே !

ஐ.வரதராசா
ஓய்வுநிலை அதிபர்
உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் திருமதி பேரம்பலம் தெய்வானைப்பிள்ளை
(தங்கம்மா ரீச்சர்)
பற்றிய என் நினைவுகள்

உசன் கிராமம் பல வளங்களும் நிறைந்த செல்வம் செழிக்கும் பழம் பெரும் கிராமம். இக்கிராம மக்கள் அமைதியும். சுறுசுறுப்பும் முயற்சியுள்ளவர்களாக வாழ்ந்து வருகின்றனர். இக்கிராமத்தில் தெய்வ ஒளி வீசும் முருகன் ஆலயமும், பல கல்வி மான்களை உருவாக்கிய இராமநாதன் மகாவித்தியாலயமும் ஊரின் நடுவே விளங்குகின்றது. இத்தகைய சிறப்புமிகு ஊரில் வளர்ந்து கல்விகற்று கல்விச் சேவையும், சமூக சேவையும் ஆற்றி எம்மை விட்டுப்பிரிந்த மூத்த ஆசிரியை அமரர் திருமதி . தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா ரீச்சர்) பேரம்பலம் அவர்களை நினைத்துப் பார்க்கின்றேன்.

எமது மதிப்புக்கும் அன்புக்கும் உரிய ஆசிரியை அமரர் தங்கம்மா ரீச்சர் அவர்கள் ஆரம்பப்பள்ளியை கொடிகாமம் திருநாவுக்கரசர் மகா வித்தியாலயத்திலும் , இடைநிலைக்கல்வியை (தமிழ் மொழி மூலம்) உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்திலும் யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் (ஆங்கில மூலம்) இருமொழிக் கல்வியைக் கற்றுப் பெருமை சேர்த்தவர். மிகக்குறைந்த வயதில் ஆசிரிய சேவைக்கு தன்னை அர்ப்பணித்தவர். ஆரம்பத்தில் வவுனியா சைவப்பிரகாசம் வித்தியாலயத்தில் தன் பணியை ஆரம்பித்து மாற்றலாகி உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் 34 ஆண்டுகள் சேவையாற்றி தன் பணியை நிறைவுசெய்தார். இவர் பல திறன் மிக்க ஆசிரியர். பல பாடங்களை இரு மொழியிலும் கற்பிக்கும் திறன் படைத்தவர். நான் இப்பாடசாலையில் கல்வி கற்ற பொழுதும் , புவியியல் ,எண்கணிதம் , சைவசமயம், சுகாதாரம், மனைப்பொருளியல் ,தமிழ் இலக்கியம் போன்ற பல பாடங்களைக் கற்பித்த பெருமைக்குரியவர். நான் மாணவனாக இருந்த பொழுது இவரிடம் சமயம், எண்கணிதம். போன்ற பல பாடங்களைக் கற்று இருக்கிறேன். அப்பாடங்களில் விசேட சித்திகளையும் பெற்றிருக்கிறேன். அதை இன்றும் நினைவு கூறுகின்றேன். அதுமட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாடுகளில் குறிப்பாக மன்ற செயற்பாடுகள் விளையாட்டுப் போட்டிகளில் இவரது ஈடுபாடு, அதீத ஆர்வம் என்பவற்றை நினைவு கூர்ந்து பார்க்கின்றேன்.

ஒரு பாடசாலையின் நிலையான வளர்ச்சியில் அப்பாடசாலைக்குரிய பாரம்பரியங்கள் விழுமியங்கள், மரபுரீதியான ஒழுங்கமைப்புக்கள், பண்பாட்டு கோலங்கள் என்பன முக்கியமானவை. இந்த வகையில் இராமநாதனால் உருவாக்கப்பட்ட இராமநாதன் மகாவித்தியாலயம் ஒரு சைவப் பாடசாலையாகும் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானின் ஒளிவீச்சுக்குள் உள்ள பாடசாலை. இந்தச் சைவப் பாடசாலையின் பண்புத் தரங்களை பேணுவதிலும் பாதுகாப்பதிலும் முன்னின்ற மூத்த ஆசிரியைகளுள் மிகவும் குறிப்பிடக்கூடியவர் அமரர் தங்கம்மா ரீச்சர் என்றால் மிகையாகாது. ஆசிரியை, ஆசிரியர்களுக்குரிய பண்புகளுடன் கற்பித்தவர். மாணவர்களுக்கு முன்மாதிரியாக விளங்கியவர். பல ஆயிரம் மாணவர்களை உருவாக்கியதில் பெரும் பங்காற்றியவர். அவரால் உருவாக்கப்பட்ட பல மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் நல்ல நிலையில் வாழ்கின்றனர். இவரது மரணம் இவர்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இவரது கணவனின் படிமுறை வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை செய்துள்ளார். இவரில்லாமல் அவரில்லை அவரில்லாமல் இவரில்லை என்ற பிணைப்புடன் வாழ்ந்தவர்கள் நான் அடிக்கடி இவர்களை சந்திக்குச் செல்லும் போது பரிமாறிக் கொள்கின்ற அனுபவங்களை நினைத்துப் பார்க்கின்றேன். அவர்கள் உள்ளத்தில் பாடசாலையைப் பற்றியும், ஊரினைப் பற்றியும், கோவில்களைப் பற்றியும் கொண்டுள்ள பற்றுறுதியை எப்பொழுதும் எண்ணிப் பார்ப்பதுண்டு. அத்தகைய பெருமைக்குரிய ஆசிரியையை இழந்து விட்டோம்.

அவரது சேவைக்கு பெருமை சேர்க்கும் வகையில் பிள்ளைகளும் , பேரப்பிள்ளைகளும், மருமகனும், மருமகள்மாரும் விளங்குகின்றனர். இவர்கள் அமைதியானவர்களாகவும், பண்பானவர்களாகவும் விளங்குவதோடு சமூகத்திற்கு எடுத்துக் காட்டாகவும் விளங்குகின்றனர். இத்தகைய விருட்சத்தின் வித்தாக விளங்கிய எம்ஆசிரியை இவ்வுலகை விட்டு நீங்கினாலும் அவரால் உருவாக்கப்பட்ட எம்போன்ற மாணவர்கள் அவர் பணியைத் தொடருவோம். அவர் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல உசன் முருகப் பெருமானை வேண்டுவதோடு, அவர் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு என் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அ.அகிலதாஸ் (மாணவன்)
அதிபர்
கொக்குவில் இந்துக் கல்லூரி
கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரணி போற்றும் தங்கம்

"தங்கம்மா ரீச்சர்" என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்ட அமரர் தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்களின் இழப்பின் துயர் அதிர்வுகள் இன்னும் என்னில் ஆறவில்லை. தங்கம்மா ரீச்சர் அவர்கள் குடும்பத்துடனான என் அறிமுகம் கால் நூற்றாண்டுகளுக்கு மேலானது. தங்கம்மா ரீச்சர் ஆத்மீகத்திலும் , அன்பிலும் , பண்பிலும், கடமையுணர்விலும் பெயரைப் போலவே தங்கமானவர். சுமார் இரண்டு தசாப்தங்களுக்கு முன் நான் ஒரு இளம் ஆசிரியராக யாழ் உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் பணியாற்றிய காலத்தில் தங்கம்மா ரீச்சருடன் இணைந்து பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்தது. அத்தருணத்தில் ரீச்சரின் வாழ்க்கைத் துணைவர் மதிப்புக்குரிய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. க. பேரம்பலம் அவர்களே எமது வித்தியாலய அதிபராகவும், உசன் கொத்தணி அதிபராகவும் விளங்கினார். அன்று அவர்கள் இருவரிடமும் இருந்து எனக்கு கிடைத்த வழிநடத்தலும் , ஆதரவுமே என்னில் தலைமைத்துவ ஆற்றல் மேம்பட உதவின என்பதை பெருமையுடன் இத்தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தங்கம்மா ரீச்சர் ஆசிரியர்களுக்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். மாணவருடன் ஒரு போதும் அவர் கடுமையாக நடந்து கொண்டதில்லை. தவறிழைப்பவரை அரவணைத்து அறிவுரை புகட்டி நல்வழிப்படுத்துவதில் அவர் வல்லவர். அவருடைய மென்மையான , இனிய குரலுக்கு கட்டுப்படாத மாணவரே இல்லையெனலாம். தன் கடமையையும் , மாணவரையும் மானசீகமாக அவர் நேசித்தார். தன் கணவர் அதிபராக இருந்த போதிலும் பாடசாலை நிர்வாக விடயங்களில் அவர் ஒரு போதும் தலையீடு செய்வது கிடையாது. எப்போதும் சக ஆசிரியர்களின் நலன்களையே முதன்மைப்படுத்துவார். இதனால் மாணவர் , ஆசிரியர்கள், சமூகம் மத்தியில் அவருக்கு தனி மதிப்பிருந்தது. தங்கம்மா ரீச்சரின் அணுகுமுறைகள் மென்மையானவையாக இருந்தாலும் அவர் ஒரு விடயத்தில் தீர்மானம் எடுத்துவிட்டால் பின்னர் அதனை எவராலும் மாற்ற முடியாது. தன் கொள்ளைகளை அவர் ஒருபோதும் விட்டுக் கொடுத்தது கிடையாது.

தங்கம்மா ரீச்சர் கடமையுணர்வு மிக்க ஆசிரியராக இருந்து அதேவேளை தன் குடும்பத்தினருக்கும் அன்புமிக்க அன்னையாக விளங்கினார். தன் கணவர் பிள்ளைகள் மட்டில் அவர் கொண்டிருந்த அன்பு அபரீதமானது. ஓய்வு நேரங்களில் அவர்கள் பற்றி பேசும் போது அவர் முகத்தில் பெருமிதம் பளிச்சிடுவதை பல தடவைகள் நான் கண்டுள்ளேன். தங்கம்மா ரீச்சரும், பேரம்பலம் சேர் அவர்களும் ஒருவரையொருவர் ஆழமாக நேசித்தது மட்டுமன்றி ஒருவருக்கொருவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமதிப்பளித்தனர். இந்தப் பய பக்தி ஒவ்வொரு குடும்பங்களிலும் பிரதி பலிக்க வேண்டிய உரிய பண்பாகும். பிறர் பற்றி வீண்பேச்சு பேசாமை தங்கம்மா ரீச்சரிடம் உள்ள இன்னுமொரு உயரிய பண்பாகும். அதே வேளை நொந்தவர்களுக்கு வாரி வழங்குவதிலும் அவருக்கு எவரும் நிகரில்லை.

பணியில் மட்டுமல்லாது வாழ்வாலும் நல்லாசிரியராக வாழ்ந்த தங்கம்மா ரீச்சரின் மறைவு அவர் குடும்பத்துக்கு மட்டுமல்ல உசன் மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களுக்கெல்லாம் பேரிழப்பாகும். தங்கம்மா ரீச்சர் மூலமாக இறைவன் எம் சமூகத்திற்கு அருளிய சகல நன்மைகளுக்கும் இறைவனுக்கு நன்றி நவில்கின்றேன். இத்தருணத்தில் அவரின் மறைவால் துயருறும் அன்னாரின் கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்ப உறவுகளுக்கு என் இதயபூர்வ அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு.எப்.எக்ஸ்.அன்ரன்
அதிபர்
யா/ நாவாந்துறை றோ.க.வித்தியாலயம்.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பினால் அனைவரையும் ஈர்த்தவர்.

அமரத்துவம் எய்திய தங்கம்மா ஆசிரியர். எமது கிராமத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பலருக்கு எழுத்தறிவித்த அன்னை என்று சொல்லலாம். முப்பத்திமூன்று வருடங்களாக உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தில் தனது கல்விச் சேவையையும் ஒழுக்க நெறியையும் மாணவர்களுக்குப் போதித்த ஒரு பெருந்தகை. அவரிடம் கல்வி பயின்ற பலர் இன்று உயர் நிலையில் இருக்கின்றார்கள்.

அவரது இனிமையான பேச்சும் யாரிடமும் அன்பு பாராட்டுகின்ற தன்மையும் அவர் எல்லோரது மனதிலும் இடம் பிடிப்பதற்கு காரணமாக அமைந்தது. மாணவர்களின் தவறுகளுக்குக் கூடத் தனது கண்டிப்பை இனிமையான வகையில் சொல்லுகின்ற திறமை அவருக்கேயுரியது. பாடசாலையிலும் சமூகநிகழ்வுகளிலும் குடும்பத்திலும் எந்த விடயத்தையும் திட்டமிட்டு நடத்திச் செல்லுகின்ற திறமையுடையவர்.

அவரது வாழ்க்கைத் துணைவரான பேரம்பலம் ஒரு சிறந்த ஆசிரியர். ஒரு சிறந்த ஆசிரியராக விளங்குவதற்கு இவரது பின்புலமும் ஓர் முக்கிய காரணமாகும். உசன் கிராம வரலாற்றைச் சிறந்த முறையில் வடிவமைத்து உசன் பதியின் பெருமையை உலகறியச் செய்த பேரம்பலம் ஆசிரியரின் செயற்பாட்டுக்கு இணையாக நின்று செயற்பட்டவர்.

அவரது சிறந்த சேவையும், நற்பண்பும், எளிமையான வாழ்க்கையும் அனைவருக்கும் முன்னுதாரணமாகத் திகழ்வதோடு "பிறர் பிள்ளை தலை தடவ தன்பிள்ளை தானே வளரும்" எனும் நாட்டு மொழிபோல் அவரது பிள்ளைகளும் கல்விச் சமூகத்தில் உயர் பதவிகளை வகிப்பதோடு சிறந்த ஒழுக்க சீலர்களாக நிறைந்த வாழ்வு வாழ்கிறார்கள்.

இவரிடம் ஆரம்பக் கல்வியை கற்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதுமட்டுமன்றி அவருக்கு வைத்தியம் செய்யும் மனநிறைவான பணியும் எனக்குக் கிடைத்தது. தனது வாழ்க்கையில் எல்லாவற்றையும் திட்டமிட்டு நடத்திய தங்கம்மா ரீச்சர் தனது வாழ்வின் நிறைவையும் ஞானத்தின் பால் அறிந்து கொண்டார். அதனால் இறுதிப்பயண ஏற்பாடுகளையும் தனது குடும்பத்திற்கு வகுத்துக் கொடுத்திருக்கின்றார். என்னையும் இறுதி நேரத்தில் அழைத்து விடை தந்தார்.

மரணபயணம் எல்லோருக்கும் உண்டு. வாழ்வின் நிறைந்த பயனை உணர்ந்தவர்களுக்கு இறையடி செல்லும் போது மரணபயம் இருப்பதில்லை. உசன் முருகனை குலதெய்வமாக வழிபட்டு வந்த இவர் முருகனின் உற்சவ காலத்திலேயே அவரால் ஆட்கொள்ளப்பட்டுள்ளார்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

வைத்திய கலாநிதி
ஐ.ஜெபநாம கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம்மா ரீச்சர் மாணவர்களின் பரீட்சைப் பெறு பேறுகளிலும் நல்வாழ்விலும் சாதனை புரிய அத்திவாரமிட்டார்

எம்மை விட்டுப் பிரிந்து விட்ட எமது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய ஆசிரியை "தங்கம்மா ரீச்சரின்" நினைவு மலருக்கென இச்செய்தியை அனுப்புவது அன்னாரின் மறைவின் துயரத்தின் மத்தியின் சிறு ஆறுதலைத் தருகிறது.

தங்கம்மா ரீச்சர் இப்பூவுலக வாழ்வினை முடித்துக் கொண்டாலும் மாணவர்களாகிய எமது மனங்களில் இன்றும் நீக்கமற நிறைந்தே இருக்கின்றார். அவரது நினைவும் மாறாத புன்னகையுடன் கூடிய தெய்வீகத் தோற்றமும் என் போன்ற அவரது மாணவர்களது மனங்களை விட்டு ஒருபோதும் நீங்கப் போவதில்லை. ஆசிரியர்கள் மாணவர்கள் மீது கொண்டுள்ள, கொண்டிருக்க வேண்டிய அன்பு, அக்கறை ஆகியவற்றை மனதால் உணர்வுடன் கண்களாலும் பார்க்கக் கூடிய ஓர் வடிவமாக ஓர் உருவமாக (EMBODIMENT) அவர் விளங்கினார் என்றால் அது சற்றேனும் மிகையான கூற்றாகாது.

தங்கம்மா ரீச்சர் எண்கணிதம், சுகாதாரம், ஆகிய பாடங்களை உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கு திறம்படக் கற்பித்தார். குறிப்பாக எண் கணிதத்தின் நெழிவு சுழிவுகளை யெல்லாம் கற்றுத் தேர்ந்து அப்பாடத்தை மாணவர்களாகிய எமக்கு மிகச் சிறப்பாகப் போதித்து பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்ள வழி செய்தார். க.பொ.த சாதாரண தர வகுப்புக்களுக்கு வேறு பிரிவு மாணவர்களுக்கு சைவசமயம் மனைப்பொருளியல் ஆகிய பாடங்களையும் திறம்படக் கற்பித்தவர்.

இவையெல்லாவற்றையும் விட அவரது மாணவர்களது (எல்லாவற்றையும் தீர்மானிக்கின்ற) மன அமைதியிலும் பொதுவான எதிர்கால முன்னேற்றத்திலும் அவரது பங்களிப்பு கூடிய முக்கியத்துவமுடையதாகும். மாணவர்கள் மீது அன்னார் ஏற்படுத்திய தாக்கம் அவர் கற்பித்த பாடங்களின் எல்லைகளுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருக்க வில்லை. மாணவர்கள் கல்வித் துறையிலே பல சாதனைகளைச் செய்வதற்கு இடையறா ஊக்கத்தினை வழங்கிக் கொண்டிருந்த மகத்தான ஆசிரியை அவர்.

நாங்கள் தொட வேண்டிய, எங்களால் அடையப்படக் கூடிய உயரங்களை அவர் அடையாளம் காட்டினார். நான் கொழும்புப் பல்கலைக்கழகம் சென்ற போது " நீ முதல் வகுப்பில் சித்தியடைய வேண்டும் என்று கூறி அனுப்பிய ஒரே ஆசிரியர் தங்கம்மா ரீச்சர் என்றே சொல்லலாம். அந்த வகையான ஊக்கப்படுத்தல்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்ப்புக்களும் முதலாம் வகுப்பு சித்தியினை பல்கலைக் கழக இறுதித் தேர்வில் பின்னர் நான் பெற்றுக் கொள்வதற்கான அத்திவாரமாக இருந்தன என்றே இன்றும் நான் எண்ணுகின்றேன். நன் மாணாக்கர்களை அடையாளம் காண்பதிலும் அவர்களைப் பாராட்டி ஊக்கப்படுத்துவதிலும் அவர் காட்டிய அக்கறையும் இவற்றிற் கொல்லாம் அடிப்படையாக இருந்த அவரது தூய மனமும், அன்பும் என்றும் போற்றுதற்குரியவை.

ஒரு மனித முன்னேற்றம் கண்டு உண்மையில் மகிழ்ச்சியடையக் கூடியவர் இக்காலத்தில் மிகச் சிலரே இருப்பார்கள். அவ்வாறானவர்களில் தங்கம்மா ஆசிரியையும் உள்ளடங்குவர் என்பதில் எதிர்க்கருத்துக்கு இடமிருக்க முடியாது. அத்தகைய ஆசிரியர்களுக்குள்ளும் முதற் தரமாக விளங்கியவர் எமது தங்கம்மா ரீச்சர். அவர் வாழ்வும் பணியும் நெருக்கடி மிகுந்த இக்காலகட்டத்தில் எல்லோராலும் பின்பற்றப்பட வேண்டியனவாகும்.

அன்னாரது ஆத்மா சாந்தியடையவும், அவரது கணவர் அன்புக்கும், மதிப்புக்கும் உரிய பேரம்பலம் ஆசான் அவர்கட்கும், பிள்ளைகட்கும் ஈடு செய்ய முடியா இழப்பின் மத்தியில் மன அமைதி பெறவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

த. கோவிந்ததாஸ்.
பழைய மாணவன்.
உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்.
ஓய்வுநிலை பிரதேச முகாமையாளர்.
ஹற்றன் நஷனல் வங்கி.

இலக்கம் 10,
இரண்டாவது ஒழுங்கை,
தெஹிவளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேன்மை மிகு சேவை செய்த உசன் அன்னை

மேன்மை மிகு பணிசெய்து
மிகப் பலரை உயர்த்தி விட்ட
நேர்மை மிகு ஆசிரியப் பெருந்தகையே
தங்கம்மா அம்மாவே தங்கம்மா எம் இதயத்தில்

முத்தான பணியே என் முழுமூச்சாம் என்று சொல்லி
பணிவோடு எமையணைத்து
பணியோடு நினையினைத்து
கற்பித்த ஆற்றல் எமை கண்கலங்க வைக்குதம்மா

ஏழை பணக்காரன் என்கின்ற பேதமின்றி
மாணவர்கள் எல்லோரும் மலர்ந்திட வேண்டுமென்று
மானாத பணி செய்து வலிமை மிகு உலகினிலே
ஆளாக்கி எமையெல்லாம் அழகு பெற வைத்தவளே
மீளாத்துயில் கொண்டு எமையெல்லாம்
மாளாத் துயரினிலே மாட்டி விட்டதேனம்மா

தெய்வானை என்ற திருநாமம் பெற்றதனால்
தினம் முத்துக்குமரன் பாதம் பற்றி அணைத்தனையோ
தெய்வத்திருப்பணியும் தொண்டு நிறை
கல்விப் பெரும் பணியும் ஆற்றிய திருமகளே
தினம் போற்றியே நிற்கின்றோம்
நின் புகழ் தரணியில் என்றென்றும் வாழியவே

ஆசிரியையாக மட்டுமன்றி –எம்
அம்மாவாய் அன்புச் சகோதரியாய்
உற்ற தோழியாக உறுதுணை கலங்கரை விளக்கமாக
எத்தனை வகிபாகம்– இது
எப்படி முடிந்ததம்மா?
தங்கமான இதயத்தோடு
தங்க நிகர் பணி செய்த
தங்கம்மா அம்மாவே எம் இதயத்தில்
என்றென்றும் வீற்றிருப்பீர்...

துயருறும் மாணவி
திருமதி. புஸ்பராணி சிவானந்தம்
உசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் என் நினைவுடன் என்.................

மாதமொன்று ஓடி மறைந்தது
அழுது ஆறவில்லை என் மனம்
மனதை வாட்டுகிறது உங்கள் சிரித்த முகம்
நினைவில் நிழலாடுகிற உங்கள் பாசம்

பள்ளிப் பருவத்திலே பக்குவமாய் பேணி
கல்விப் பெறுபேற்றில் அக்கறை காட்டி
பரிசுப் பொருள் தந்து கல்வியார்வம் ஊட்டி
வகுப்பு முந்நிலையில் என்னை நிற்க வைத்தீர்கள்.

கல்விப் பருவம் முடித்துப் பருவ மங்கையானதும்
பதவிப் பேறுபெற அரும்பாடுபட்டீர்கள்
அச்சமயமே என் தந்தையை இழந்தேன்.
தந்தைப் பிரிவை மறைத்துத் தந்தையாயிருந்தீர்கள்

விவசாயப் பள்ளியில் விதம் விதமாய் பயிற்சி பெற
அலங்காரப் பொருட்களுடன் அமைதியாக வந்து செல்வீர்
என் பயிற்சி முடிந்ததும் என் திறமை கண்டு
முன்னேற வழி ஒன்று முன்னின்று சமைத்தீர்கள்

எந்நேரமும் என்னை உங்கள் மழலைச் செல்வங்களுடன்
ஐவராகக் கணித்து ஆதரவு தந்தீர்கள்
தன்னைப் போன்று அரும்பெரும் ஆசிரிய பணியை
தளராது தரணியில் புகட்ட வழிவகுத்தீர்கள்

இது மட்டுமா? என் அன்னையையும் இழந்தேன்
அந்த நேரத்திலும் அன்னையாக அரவணைத்தீர்
இல்வாழ்க்கை அமைத்து இனிதாக வாழவைத்து
என் மகன்கள் இருவரையும் வளமுடன் வாழ வைத்தீர்கள்.

காலச்சக்கரத்தில் கதி கலங்கி நின்ற போது
கணவரும் தூர தேசம் சென்று விட
எங்களையும் தம்மக்கள் எனப் பாதுகாத்து
கடமையைப் பெரிதாகக் கொண்டீர்கள்

சிறிது காலம் எம் பிரிவை பொறுக்காது
சேர்ந்து வாழ வேண்டும் என்ற சிந்தையுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடா தேசம் செல்வதனைக் கருத்திற் கொண்டு
ஓங்காரனை வேண்டி ஒழுங்காக அனுப்பி வைத்தீர்கள்

என் முயற்சிகளுக்கு எல்லாம் உறுதுணையாக
என்றும் என் நெஞ்சில் நீங்கா இடம்பெற்று
சாந்தா சொரூபியாய் விளங்கிய
என் குஞ்சம்மாவே ! எப்போ நான் காண்பேன் இனி

தங்கம் என்ற நாமம் அறியாதார் யாருமில்லை
பங்கம் என்ற எண்ணம் இவர் அகராதியில் இல்லை
அங்கம் முழுவதும் அம்பிகை புதல்வனை
சங்கமமாகச் சரண் அடைந்து சாந்தி அடைவீர்கள்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி !

பெறாமகள்
தேவி
கனடா

ஒரு மனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தான்
என்பது முக்கியமல்ல!
ஆனால் எப்படி வாழ்ந்தான்
என்பதே மிக முக்கியமானது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார் போற்ற அறிவூட்டிய மாமிக்கு

அன்பின் வடிவம்..............................
அமைதியின் சிறப்பு........................
பண்புடன் பலரையும் மதிக்கும் குணம்..........
சிறு பிள்ளை போல் சிரித்த முகம்...............
மற்றவர் கருத்தை மதிக்கும் மாண்பு.............
சினமே கொள்ளா இன்முகச் சிறப்பு.............
கனிவான பேச்சு பணிவான செயல்..............

இவையாவையும் நான் என் மாமியிடம் பார்த்ததுண்டு. மாமி அவர்கள் இறைபதம் எய்தி விட்டார் என்ற செய்தி எனக்கும், என்மனைவி , என் மகன்மார்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பை ஏற்படுத்தியுள்ளதை யாரும் மறக்க முடியாது. இருபத்தாறு வருடங்கள் பிரிந்த சுமை என்றும் என் இதயத்தில் கனத்துக் கொண்டிருக்கின்றது. இதை என்றுமே இறக்க முடியாது. மாமி அவர்கள் என்றும் என் வாழ்வில் நல்வழிகாட்டியாக, தாயாக, ஒரு சிறந்த ஆசிரியையாக இருந்து என்னை வழிநடத்தியுள்ளார். இது என்றும் என்னை வழிநடத்திக் கொண்டே இருக்கும்.

பழநிப் பதிவாழ் உசனுறையும் பாலகுமாரன் அடி இறைஞ்சி, அவன் பாதம் சரண் அடைய என்றும் பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மருமகன்
குமார்
கனடா

"பிறையே கலங்காதே உன்னுள் தான்
பூரண சந்திரன் புதைந்துள்ளான்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

மண்ணில் * 09 * 06 * 1937

விண்ணில் * 28 * 05 * 2012

பேரம்பலம் (ஓய்வு நிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்) அவர்களின் அன்புத் துணைவியாரும்
உசன் இராமநாதன் மகாவித்தியாலய ஓய்வு நிலை ஆசிரியருமாகிய

அமரர் தெய்வானைப்பிள்ளை (தங்கம்மா ரீச்சர்)

உயிருள்ள கருவாக உயிருக்குயிராக
வாழ்வின் வடிவாக உறவாடிய தாயே
மண்ணில் பிறந்த மாந்தரெல்லாம்
மண்ணில் மறைகின்ற போதும்
முடியவில்லை எத்தனை பிரிவினைக்கண்டும்
நம் மனம் அமைதி கொள்வதில்லையே படைத்தவன்
பறித்திட்டான் பாசத்தின் கண்பட.
நாம் பதைக்கின்றோம்! உமையெண்ணி.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம்சாந்தி ! சாந்தி ! சாந்தி !

30.05.2012.

யா/உசன் இராமநாதன் ம.வி
பாடசாலைச்சமூகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி
துயர் பகிர்கின்றோம்

மண் மகிழ — கண் நெகிழ

09 ⸱ 06 ⸱ 1937 — 28 ⸱ 05 ⸱ 2012

அமரர் திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

(ஓய்வுநிலை ஆசிரியர் உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

தெய்வத்தின் திருவுருவாய் தேவியின் வழவமதாய் வந்துதித்தீர்
வா**ய்**மையின் வழிதனில் வளமோடு வாழ்ந்திருந்தீர்
வானுயர் புகழினை குடும்பத்தினருக்கு வண்ணமாய் அமைத்தருளினீர்
தே**னை**ப் போல் அமுதமொழி பேசிடும் அன்னையாய் அவதரித்தீர்
இ**ப்** பூவுலகில் புனிதராய் புதுமைகள் பொலிய வாழ்வமைத்தீர்
பிள்ளைகளின் அன்புத் தாயாக நானிலம் சிறக்க வைத்தீர்
வெ**ள்**ளை உள்ளத்தோடு அவனியில் அறிவினை அள்ளித்தந்தீர்
வி**ளை**கின்ற நிலமதில் அறிவின் விருட்சங்களை வித்தாக விதைத்தீர்
பேரம்பலம் என்னும் பெருமகனாருக்கு பெருமைக்குரிய துணைவியாய்
பே**ர**ப்பிள்ளைகளையும் கலைஞானங்களில் கவினுறவைத்தீர்
தங்க**ம்**மா என்றழைக்கும் அற்புத ஆணிமுத்தாய் அமைதியானீர்
பக்குவமாய் பராமரித்த பிள்ளைகளைப் பிரிதவிக்க விட்டதேனோ?
க**ல**க்கமுடன் உமையிழந்து உள்ளங்கள் வருந்தி வாடுதிங்கே!
அ**ம்**மாவே! மீண்டு(ம்) வந்திடுவீர் மீளாத்துயர் தீர்த்திடுவீர்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு, எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்கி, அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

"அன்பொளி கல்வியகம்"
இந்துக்கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
ஆசிரியர்கள், உதவி ஆசிரியர்கள்,
மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

மனம்மகிழ
09.07.1937



மனம்நெகிழ
28.05.2012

அமரர்
திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

விவசாய பீடத்தின் இயந்திரவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர்
கலாநிதி (திருமதி) துஷ்யந்தி மிகுந்தன் அவர்களின் அன்புத்தாயாரும்
உயிரியல்துறை பேராசிரியர் கு.மிகுந்தன் அவர்களின் அன்புமாமியாருமான
திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்களின் மறைவில் ஆழ்ந்த துயருற்றோம்

காற்று வழியே வந்த சேதி காதுவழியே நுழையும் முன்னே
காலனவன் உம் உயிரை குடித்ததேனோ?
நேற்று இருந்த வாழ்வுதனை மீட்டி இரைமீட்கின்றோம்
நல்ல கதைகள் சொல்லி நல்லபடி வாழ
செல்ல மொழி பேசி இருந்தீர் - நீர்
சொன்னபடி வாழும் உம் பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் முகம்
நோக்க விழிமடல் திறப்பீரோ?
உங்களது பிரிவால் உள்ளமது வாடும்
உறவுகளோடு எங்களது கண்ணீரை
உதிர்க்கின்றோம் பூக்களாய் உம் திருவடியில்

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்திக்கின்றோம்.

19th அணி
இயந்திரவியல் சிறப்புப்பிரிவு மாணவர்கள்
விவசாயபீடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
09.07.1937

விண்ணில்
28.05.2012

திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

[ஓய்வுநிலை ஆசிரியர் யா/ உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்]

யாழ்ப்பாண பல்கலைக்கழக, விவசாய பீட, இயந்திரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துஷ்யந்தி மிருந்தன் அவர்களின் அன்புத்தாயாரும், விவசாய உயிரியல் துறை தலைவர் பேராசிரியர் குணசிங்கம் மிருந்தன் அவர்களின் அன்பு மாமியாருமான

திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

அவர்களின் மறைவால் ஆழ்ந்த துயருற்றிருக்கின்றோம்.

உசன் மண்ணில் பிறந்து உபாத்தியாயராய்த் திகழ்ந்து
அன்பிற்கினிய நன்மக்காள் நால்வரையும் பெற்று
ஆனந்தமாய் வளர்த்து, ஏற்றமுடன் மக்களை நீர் ஏற்றிவைத்தீர் நானிலத்தில்...!
இடை நடுவே விட்டுவிட்டு இப்போது எங்கு சென்றீர்...?
பந்தங்கள் சொந்தங்கள் யாவும் பரிதவிக்க
பண்புள்ள உன் மக்கள் பகல் இரவாய் வாடி அழ இப்போது எங்கு சென்றீர்...?

துன்பங்கள் வந்த போது துணை நின்றீர் எம்முடனே – அன்பிற்கினியவரே!
ஆசையுடன் காத்திருந்தோம். கூற்றுவன் வந்திங்கு கொண்டு சென்றான்
உம் உயிரை ஏற்குமோ இவ் வையகம் அம்மா....!
இறைஞ்சுகின்றோம் இறைவனையே இப்போது எங்கு சென்றீர்...?

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட சமூகம்
யாழ். பல்கலைக்கழகம்

30.05.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர்க் காணிக்கை

மண்ணில்
09.07.1937

விண்ணில்
28.05.2012

அமரர்

திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

விவசாய பீடத்தின் இயந்திரவியல் துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர்
கலாநிதி (திருமதி) துஷ்யந்தி மிகுந்தன் அவர்களின் அன்புத்தாயாரும்
உயிரியல்துறை பேராசிரியர் கு.மிகுந்தன் அவர்களின் அன்புமாமியாருமான
திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் அவர்களின் மறைவில் ஆழ்ந்த துயருற்றோம்

பேசித்திரிந்த – ஒரு தெய்வம் இன்று
பேசாதிருப்பதேனோ?
உம் உயிர் பிரிந்த சேதிகேட்டு
கண்ணீர் பிரிகிறது
கடைவிழியால்
கறுப்பாய் போகிறது
கார்மேகம் தானும் அழுவதற்கு

சேர்ந்து நாம் சிரிக்கின்ற வேளையிலே
பிரிக்கின்ற எண்ணத்துடன்
கொடும் காலன் வந்தானோ?
காலம் மறக்காது உமை
காத்துக்கிடக்கின்றோம் உம் வருகைக்காய்

சூரியன் நிரந்தரமாய் மறைந்துவிட்டதோ? – இவ்வுலகில்
எம் கண்ணீர் விழுந்து
உம் தலைமாட்டில் எரிகின்ற
விளக்கு எரியட்டும்!
எம் உள்ளத்துடன் சேர்ந்து ...

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்திக்கின்றோம்.

20ம் அணி
விவசாயபீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீர் அஞ்சலி

திருமதி

தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

(முன்னாள் ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய முன்னாள் அதிபரும், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும், உசன் கிராமத்தின் வளர்ச்சியில் பல்வேறு மன்றங்களுக்கூடாக பணிபுரிந்தவரும் எமது மன்றத்தின் முன்னாள் ஆலோசகருமான க. பேரம்பலம் அவர்களின் அன்பு மனைவி

திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

(முன்னாள் ஆசிரியர், யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(B/259) (34.14)

உசன், மிருசுவில். உசன் இந்து இளைஞர் மன்றம்.

கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண பல்கலைக்கழக, விவசாய பீட, இயந்திரவியல் துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி துஷ்யந்தி மிகுந்தன் அவர்களின் அன்புத் தாயும், விவசாய உயிரியல் துறை தலைவர் பேராசிரியர் குணசிங்கம் மிகுந்தன் அவர்களின் அன்பு மாமியுமான திருமதி தெய்வானைப் பிள்ளை பேரம்பலம் அவர்கள் 28.05.2012 அன்று சிவபதமடைந்ததையிட்டு அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட நலன்புரி சங்கம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிய பதிவுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண பந்தத்தில் இணைந்த போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாம்பத்திய உறவில் இணைந்த போது...

தாம்பத்திய உறவில் மகிழ்ந்த போது...

ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவர் பிள்ளைகளுடன் கூடிக் குலாவிய இளமைக்காலத்தில்

கணவர் பிள்ளைகளுடன் அகமகிழ்ந்து வாழ்ந்த காலத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ நற்சிந்தனைகள்

ஆக்கியோன்

இலக்கிய கலாநிதி

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள்

திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம்

(தங்கம்மா ரீச்சர்)

ஞாபகார்த்த வெளியீடு

27.06.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

என்றும் எங்கள் குருநாதர் இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள். திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில் 1957-1958 இல் ஆசிரிய பயிற்சி பெற்றபோது இத் தொடர்பு ஏற்பட்டது. இத்தொடர்பு இயற்கை எய்தும் வரை தொடர்ந்தது. எனக்கும் அவ்வண்ணமே.

யான் ஓர் எழுத்தாளன் அல்லன் ஆனால் பண்டிதமணி ஐயா மேல் கொண்ட பற்றும் பாசமுந்தான் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையின் உபதலைவராக இருக்கும் பேறு எனக்குக் கிடைத்தது.

திருமதி. தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் இயற்கையெய்தியதன் நினைவாக பண்டிதமணி ஐயா எழுதிய "சைவ நற்சிந்தனைகள்" என்ற அருமந்த நூலினை இந்தக் காலத்தின் தேவையையொட்டி மறுபிரசுரஞ் செய்ய வேண்டும் என்று விரும்பினோம். பண்டிதமணியின் நூற்றுப் பதின்மூன்றாவது பிறந்த தினமாகிய 27.06.2012 ம் திகதி அன்று அமரரின் முப்பத்தோராம் நாள் கிரிகைகள் நடைபெற இருப்பதும் அன்றைய தினம் இந்நூல் மறுபிரசுரஞ் செய்து வெளியிடுவதும் பூர்வீகத் தொடர்பென்றே கூறலாம்.

முதல் முறையாக இந்நூலை வெளியீடு செய்த பெருமை குரும்ப சிட்டி சன்மார்க்க சபையினரையே சாரும். பண்டிதமணி அமரத்துவம் அடையும் வரை நிழல் போல் பிரியாதிருந்த அமரர் ஆசிரியமணி பஞ்சாட்சரம் தமது அன்னை நினைவாக 08.04.1995 இல் இரண்டாவது முறையாக இந்நூலை மறுபிரசுரஞ் செய்தார்கள். மூன்றாவது முறையாக 27.06.2012 திகதியாகிய இன்று அமரர் தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் ஞாபகமாக மறுபிரசுரஞ் செய்யப்படும் பேறு எமக்குக் கிடைத்துள்ளது. வள்ளுவர் போல் என்றும், எப்பொழுதும், எல்லோருக்கும் பயன்படத்தக்கது இந்நூல்.

"சைவ நற்சிந்தனைகள்" எனும் இலக்கிய கலாநிதி பண்டிதமணி ஐயா அவர்களின் ஆக்கத்தை மறுபதிப்புச் செய்வதாயின் பண்டிதமணி நூல் வெளியீட்டு குழுவின் முன்னனுமதி பெற்றே வெளியிட வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்நூலை மறு பிரசுரஞ் செய்வதற்கு அனுமதியும், ஒத்துழைப்பும் வழங்கிய பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினருக்கும் இந்நூலின் அச்சு வேலைகளை ஒழுங்கமைத்து செய்துதவிய "ஜெயஸ்ரீ" அச்சகத்தாருக்கும் என்றும் எமது நன்றிகள்.

க. பேரம்பலம் (கணவர்)
ஓய்வுநிலை உதவி கல்விப் பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயம்

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு, இறப்பு முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன.

அக்காரியங்களை நடத்திவைக்கும் பொருள் எது? அப்பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்; கடவுள்.

கடவுளுக்கு வடிவம் உண்டா? உண்டு. அது இந்தக் கண்ணாற் காண முடியாதது; சுத்த அறிவினாற் காணத்தக்கது. அதற்கு நீதி என்று பெயர்.

நீதி வெகு ஆழமானது; மிகமிக நீளமானது. "பங்கயத் தயனு மாலறியா நீதி" என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும் நீளத்தையும் காணுதற்குப் பிரமவிஷ்ணுக்களுக்குக் கூடச் சுத்த அறிவு போதிய அளவுக்கு உண்டாகவில்லை.

நீதியை மறைக்குங் குற்றங்கள் இரண்டு. ஒன்று அறியாமை; மற்றது வஞ்சகம்.

அறியாமை பாவமன்று; முயற்சிக்குப் பயன்தராது; அதனாற் குற்றம் எனப்படுகிறது.

வஞ்சகம் படுகுற்றம்; மகா குற்றம்; நரகத்துக்கு வித்து. அது அறிவு முனையை அழித்து, அந்தகாரம் செய்து கொண்டிருப்பது.

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னாரென்றுந் தெரிகிறது. விசாரித்து நிச்சயஞ் செய்யப் போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மழுக்கி, மாயஞ் செய்து விடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கள்ளவஞ்சகந்தான் நமது பரம சத்துரு. அதனோடு சதா போர்தொடுத்துக் கொண்டே நாம் சாவதானமாயிருக்க வேண்டும். வஞ்சகம் மனத்தை ஒரு கணத்திலே தன்வசப் படுத்திவிடும். நாம் அதனைச் சிறை மீட்டு அறிவு வசப்படுத்த வேண்டும். "நீதி எது! எது!! எது!!! என்ற விசாரந்தான் வஞ்சகத்தைக் கொல்லும் படை. அப்படையினாலே இச்சையை நேர் செய்து கொண்டால், அறியாமை மெல்ல மெல்ல நீங்கும். அறியாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும். அந்தச் சூரியோதயத்திலே நீதியின் பிழம்பு ஒரு சாயலாகத் தோன்றத் தொடங்கும். அறிவுச் சூரியன் மேல் எழ, எழ நீதியின் உண்மைத் தோற்றம் - கை கால் முதலிய அவயவங்கள் - காட்சியளிக்கும்; அடிமுடி தோன்றும்.

நீதியை விசாரிப்பதிலே - விசாரித்து, அந்த நீதியிலே எவ்வித வஞ்சகத் தடையுமின்றி நிலைநிற்பதிலே எவனுக்குச் சதாபரிசுத்த விருப்பம் உண்டோ, அவன் சமயி.

அந்த விருப்பத்தை நூறாயிரம் கள்ளக் காரணங்கள் கற்பித்து எவன் வஞ்சிக்கின்றானோ, அவன் சமயி அல்லாதவன்.

முந்தியவன் அகச்சமயி; மற்றவன் புறச்சமயி.

அகச்சமயி சமயத்துக்குள்ளானவன்; புறச்சமயி சமயத்துக்குப் புறம்பானவன்.

நீதியை வஞ்சகமின்றி விசாரித்து, விரும்புவது அகம். அதற்குச் சமயம் என்று பெயர்.

நீதி தான் கடவுளின் வடிவம். அதற்கு மற்றொரு பெயர் சிவம். சிவம் என்றால் நன்மை. மங்களம், நீதி என்று பொருள்.

எவன் நீதியோடு சம்பந்தப்படுகின்றானோ, அவன் சிவத்தோடு சம்பந்தப்படுகின்றான்.

சிவத்தோடு சம்பந்தப்படுகிறவனுக்குச் சைவன் என்று பெயர்.

சிவத்தோடு சம்பந்தப்பட்ட சமயம் சைவ சமயம்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெல்லாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு

அறிவு, அன்பு, அருள் என்னும் மூன்றும் அதிகாலைகள் தோறும் பெரிதுஞ் சிந்திக்க வேண்டியவைகள். இராத்திரியில் உறக்கத்துக்குப் போகும் போது அவைகளைப் பற்றிச் சற்றே சிந்தித்துக்கொண்டு உறங்கினால் அதிகாலையில் நித்திரைவிட்டு எழும்பும் போது, அவை சிந்தனைக்கு வரும்.

அறிவு என்றால் என்ன? என்பது முதலிற் சிந்திக்க வேண்டியது. உயிர் அறிவுள்ள பொருள்; ஆனால், உதவியின்றித் தானாக ஒன்றையும் அறிய மாட்டாது; கண்ணின்றி ஒன்றையும் பார்க்கமாட்டாது; காதின்றிக் கேட்கமாட்டாது. ஆகவே, உடம்பின் உதவி உயிருக்கு வேண்டியிருக்கிறது. இந்த உடம்பை உதவுவது எது? அதற்கு ஒளி என்று பெயர். உயிர் இயல்பாகவே அறியாமையோடு கூடியது. அதனால் உயிர், தான் தன்னையே இன்னார் என்று அறியாது. அப்படி அறியாமைக்கு இருள் என்று பெயர். இருளோடு கூடியிருப்பது போலவே உயிர் ஒளியோடுங் கூடியிருக்கின்றது.

"ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே இடன்" என்று ஒருமகான் கூறியிருக்கிறார். இங்கே ஒன்று என்பது உயிர். அது ஒளிக்கும் இருளுக்கும் இடனாயிருக்கின்றது. ஒளி கடவுள். இருளாகிய அறியாமை ஒரு நாளைக்கு உயிரை விட்டு நீங்கலாம். ஒளியாகிய கடவுள் எந்தக் காலத்திலாயினும் உயிரைவிட்டு நீங்காது. ஒளியாகிய கடவுள் உயிரறிவுகள் அடங்கி, இருளால் மூடுண்டு கிடக்கின்றது. ஆனால் ஒளியை இருள் மூடுமா? உயிரறிவைத்தான் இருள் மூட முடியும். கண்ணை மூடுவதால் சூரிய ஒளி மறைவது போல, இருள் உயிரை மூடுவதால் ஒளியாகிய கடவுள் மூடுண்டிருக்கின்றது. உண்மையிலே கடவுள் இருளால் மூடுண்டிருப்பதில்லை. இருள் மூடிய உயிருக்கு அதனால் மூடுண்ணாத கடவுள் சரீரத்தை உதவி, அதன் அறிவை விருத்தி செய்கின்றார். உயிர்களாகிய நாம்-நமது அறிவை, நம் அறிவுள் நீங்காதிருந்து, விருத்தி செய்கின்ற கடவுளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறவாமல் - கடவுள் கருத்தறிந்து நமது அறிவை விருத்தி செய்ய வேண்டும். கடவுள் கருத்தறிதற்குக் கடவுள் வழிநின்ற மகான்கள் நல்ல வழிகள் வகுத்திருக்கின்றார்கள். நல்வழி இருக்கிறது. நன்னெறியிருக்கிறது. வாக்குண்டாம் இருக்கிறது. ஆத்தி சூடி முதல் வள்ளுவர் பரியந்தம் நல்ல வழிகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

"புண்ணியம் ஆம் பாவம் போம்" என்பது ஔவையார் வாக்கு. புண்ணியம் செய்யத்தக்கது; பாவம் விலக்கத்தக்கது என்பது கருத்து. ஒளியாகிய கடவுளின் உபகாரங்களினால், புண்ணியம் இது, பாவம் இது என்று நாம் அறியவல்லவர்களாயிருக்கின்றோம். புண்ணியம் ஆராயப்பட வேண்டியது. "போம் பொழுது அருந்துணை புரிந்த புண்ணியம்" என்பது பெரியோர்கள் வாக்கு, புண்ணியத்தை ஆராய, ஆராய அதில் நமக்கு ஒரு பற்று உண்டாகும். அது நல்லதே. அந்தப் பற்றுக்கு அன்பு என்று பெயர். அதே சமயத்திற் பாவத்தின் தீமைகளை ஆராய்தலினால், அதில் நமக்கு வெறுப்பு உண்டாகும். அதுவும் நல்லதே. பாவத்தில் வெறுப்பும் புண்ணியத்தில் அன்பும் உண்டாவது ஒரு நல்ல அறிகுறி. அன்பு வளர்க்கப்பட வேண்டியது. அன்பு வளர வளரப் பாவந் தேயும். பாவந் தேயப் புண்ணியம் மேலும் மேலும் வளர்ந்து, அதில் அன்பு கனியும். அன்பு கனிந்த நிலையில் அருள் ஆகும். "அருள் என்னும் அன்பு ஈன் குழவி" என்பது திருவள்ளுவர் வாக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு

எப்பொருள் எத்தன்மைத்தாயினும், எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப்பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு.

காணுகிற கேட்கிற பொருள்களை அப்படியே நம்பிவிடக் கூடாது. அதே சமயத்தில் அவற்றைத் தள்ளிவிடவுங் கூடாது. கண்ட கேட்ட அப்பொருள்களை வைத்துக்கொண்டு அவை அவ்வாறு இருத்தற்கு மூலகாரணம் என்ன என்பது ஆராயப்பட வேண்டும்.

ஒருநாள் இராத்திரி ஒருவன் ஒரு தெருவில் "பாம்பு" "பாம்பு" என்று சொல்லிக்கொண்டு, பயந்து ஓடிவிட்டான். அவனுடன் கூடிவந்த மற்றொருவன், வெளிச்சத்தை உண்டாக்கி முன்னம் அவன் கண்டு பயந்த பாம்பைப் பார்த்தான். அந்தப் பாம்பு வைக்கோற்புரியா யிருந்தது. பாம்பாய்ப் பயப்படுத்திய வைக்கோற்புரியை அவன் எடுத்துச்சென்றான். இந்த வைக்கோற்புரிக் கதையிலிருந்து கண்டவைகளைக் கேட்டவைகளை ஆராய்ந்து தெளியவேண்டுமென்பது தெரிகின்றது.

"ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து"

என்பது வள்ளுவர் வாக்கு. கண்ட கேட்ட காரியங்களை முதல் ஐயப்பட்டுப் பின் தெளிவடைய வேண்டும். அப்படி ஐயற்றுத் தெளிந்தவர்களுக்கு வையகத்தின் சம்பவங்களிலும் பார்க்க, வானகத்துச் சம்பவங்களை அறிவது எளிதாயிருக்கும் என்பது வள்ளுவர் வாக்கின் கருத்து.

நாம் காணுகிற கேட்கிற பொருள்களின் மூலங்களே உண்மைகள்; நித்தியமானவைகள்; நன்மைகள். நன்மையும் உண்மையுமான மூல காரணங் களை ஆராய ஆராய அவற்றிலே நமக்கு அன்பு பெருகும்; உள்ளம் உருகும்; கண்ணீர் சொரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புதான் உயிரை உருக்கி அழுக்கை அகற்றிச் சுடர்விட்டு ஒளிகாலும்படி செய்வது.

**"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"**

என்பது அருமையான திருக்குறள். இதிலே உயிர் நிலை என்றது உடம்பு. அது அன்பின் வழியதாய் அன்பைத் தன்னகத்தே உடையதாயிருக்கவேண்டும். அன்பு இல்லையேல் இந்த உடம்பு எலும்புகளைத் தோலால் மூடிக் கட்டின ஒரு வெறும் தசைப்பொதியாய்ப் பிணமாய் விடும். மகான்கள் நமதுடம்பு வெறும் தசைப் பொதியான நடைப்பிணமாகாமல் அன்பைச் சம்பாதித் தற்கு வழிசெய்திருக்கின்றார்கள். மாணிக்கவாசக சுவாமி கள் அருளிய வாசகம் அன்பு வாசகம்; அன்பால் ஆக்கப்பட்ட வாசகம். அன்பினால் உருகி உருகிப் பொழிந்த கண்ணீரே திருவாசகம்.

"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே"

என்ற திருவாசகத்தை நாடோறும் ஓதி உருகுவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணுகிற கேட்கிற பொருள்களின் மூல காரணங் களை விசாரிக்கிறதனாலே, நமக்கு உண்மை அறிவு உண்டாகிறது. உண்மை அறிவே நேசிக்கற்பாலது. நேசம் அன்பு, அன்பு பசைத் தன்மையானது. நாம் எந்தப் பொருளிலே அன்பு செய்கிறோமோ அந்தப் பொருளோடு நம்மை ஒட்டச் செய்துவிடுகிறது இந்த அன்பு.

முத்திரையின் புறத்திலே ஒரு பசை இருக்கிறது. அந்தப்பசை முத்திரையைக் கடித உறையில் ஒட்டச் செய்து விடுகிறது. முத்திரை கடித உறையில் ஒட்டி ஒன்றாய்விடுகிறது. ஒட்டச் செய்த பசை மறைந்து விடுகிறது. பிறகு முத்திரை வேறு, கடித உறைவேறு என்ற உணர்ச்சி இல்லாமற் போய்விடுகின்றது. பசை கடித உறையாய் மறைந்து, முத்திரையுற் கடித உறையாகும்படி செய்துவிட்டது.

அன்பு, முத்திரையின் புறத்துப் பசை போன்றது. சீவர்கள் முத்திரைகள் போன்றவைகள். திருவருள் கடித உறைபோன்றது. சீவர்களாகிய முத்திரைகள், அன்பாகிய பசை கசிந்து, கண்ணீர் மல்கித் திருவருளில் ஒட்டிக் கொள்ள வேண்டும். சீவர்கள் அன்பு கசிந்து திருவருளில் ஒட்டிக்கொள்ளுமானால், சீவர்கள் திருவருளில் மயமாய்த் திருவருளுக்கு இடமான சிவமாய் விடும். மகான்கள் அன்பைப் பெருக்கித் திருவருள் கனிந்து, சிவமாந் தன்மையை எய்துகின்றார்கள். அன்பு செய்யத்தக்கது திருவருள் ஒன்றே. அந்தத் திருவருள் தான் இந்தச் சரீரமாயும், உலகமாயும் விரிந்திருக்கிறது.

"இந்தப் பூமி சிவனுய்யக் கொள்கின்ற ஆறு" என்பது திருவாசகம். இந்தச் சரீரமும் ஒரு பூமியே. உயிர்கள் வசிக்கின்ற இந்த உடம்பாகிய பூமியும் முன்னிலையாய்க் கிடக்கின்ற பூமியும் திருவருள் தந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபகாரங்கள்; திருவருளை அடைதற்கு உதவியான வைகள்.

ஒரு முதலை, நரியின் காலென்று நம்பிப் புங்கம் வேரைக் கவ்வியது. இறுகக் கவ்வியதனால், முதலையின் உள் முரசில் இரத்தம் பெருகினது. முதலை அந்த இரத்தத்தை நரியின் காலிற் பெருகிய இரத்தமென்று சொல்லிச் சொல்லிச் சுவைத்தது. இந்தக்கதை பாலர்களின் பாலபாடத்தில் வருகின்றது. வளர்ந்த மனிதன், பால பாடக் கதையை மறந்து, சேற்றிலே கிடக்கிற முதலை போலப் புங்கம் வேர் போன்ற இந்த உலக சுகங்களையே கட்டித் தழுவிச் சுவைக்கிறான். அதனாலே கவலைகளைப் பெருக்குகிறான். உலக சுகங்களைத் தந்த, உல கத்தின் மூலகாரணமான திருவருளைச் சிந்திக்கின்றானில்லை. திருவருளே அன்பு செய்தற்குரியது. அன்பு கசிந்து திருவருளில் ஒட்டிக்கொண்டால், திருவருள் தன்பால் ஒட்டிய சீவர்களை எடுத்துச் சுமக்கும். கடித உறை செல்லும் இடமெல்லாம். அதில் ஒட்டிய முத்திரையும் செல்லுமாறு போலத் திருவருள் விரியும் இடமெல்லாம், திருவருளில் ஒட்டிய சீவர்களும் விரியும். திருவருள் எல்லா உலகமும் ஆனால், சீவர்களும் எல்லா உலகமும் ஆகும். நாமெல் லாம் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருவருள் மயம் ஆவோம் ஆக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்

"பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்று மில்"

என்ற அருமைத் திருக்குறள் நாள்தோறுஞ் சிந்திக்க வேண்டியதொரு மந்திரம்.

ஒருவன் சம்பாதிக்கிற பொருள், அநுபவிக்கிற பொருள் "பழியஞ்சிய" பொருளாயிருக்க வேண்டும். பழியஞ்சுதலாவது பழிக்கு அஞ்சுதல். நாம் தேடுகிற அனுபவிக்கிற பொருளால் மற்ற ஓர் உயிருக்குக் கேடு வராமலிருக்க வேண்டும். நமது பொருள் மற்றோர் உயிரைக் கலக்கி, அதனைக் கண்ணீர் வடிக்கச் செய்யாத தாயிருக்க வேண்டும். இது, பொருளை ஈட்டுபவர்கள் உறுதியாகக் கொள்ளவேண்டிய முதலாம் இலக்க விதி. மற்றோர் உயிர் கண்ணீர் பெருக்க, நாம் வலித்துத் தேடுவோம் ஆனால், அந்தப் பொருள் நமக்குப் பெரும் நட்டத்தை விளைக்கும். அப்படிப்பட்ட பொருள், நம்மிடம் வருமானால், அது சிறிது காலம் நம்மிடம் இருந்து பெரிய பகட்டுக்கள் செய்துவிட்டு, மெல்ல மெல்ல நம்மிடம் முன்னமேயிருந்த பொருள்களையும் கொளுவிக் கொண்டு ஒரு நாளைக்குப் போய்விடும்; நம்மிடம் மூதேவியைக் குடியிருக்கச் செய்துவிடும்; "அழக்கொண்ட எல்லாம் அழப்போம்." பிறர் அழ அழ நாம் சம்பாதித்த பொருள்கள், ஒரு நாளைக்கு நாம் விம்மி விம்மி யழ, நம்மிடம் முன்னிருந்த பொருள்களையும் அள்ளிக்கொண்டு போய்விடும். ஆகவே, பொருளை ஈட்டும்போது பழிக்கஞ்சி ஈட்ட வேண்டும். இது பொருளாதார சாத்திரத்தின் முதல் விதி. இனி இரண்டாவது "பாத்தூண்." "பாத்தூண்" என்பதன் பொருள் பகுத் துண்டல்.

நல்வழியாற் பொருளைத் தேடவேண்டும். அவ்வாறு தேடியபொருளை அநுபவிக்கும் போது பகுத்து அநுபவிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாவர்க்குமாம் உண்ணும்போ தொரு கைப்பிடி"

என்பது திருமூலர் அருளிய திருமந்திரம். நமக்குக் கடவுள் இரங்கித் தந்த பொருளை நாமே விழுங்கிவிடக் கூடாது. பசிக்கிறவர்களுக்கு - உதவ வேண்டியவர்களுக்கு - உதவி, மிகுதியையே நாம் உண்ணவேண்டும். கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்து மிகுதியாயிருப்பதற்கு "மிச்சில்" என்ற பெயர். பொருள் சம்பாதித்தவன் அநுப விக்க வேண்டிய பொருள் மிச்சிலாயிருக்க வேண்டும்.

"வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்"

என்பது திருவள்ளுவர் அருளிய ஔஷதம். விருந்தினர் களை உபசரித்து மிகுதியாகிய மிச்சிலை உண்ணுகிற வனுடைய விளைபுலத்துக்கு வித்து வேண்டாம். வித்தை வித்தாமலே அவனுடைய விளைபுலம் விளைவைச் செய்யும் என்பது அந்த வேதத்தின் கருத்து.

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"

என்பது மற்றொரு வேதவாக்கு.

பொருள் பெருக்க எண்ணுகிறவர்கள், அந்தப் பொருள் மறுமையிலும் தமக்கு வந்துதவ வேண்டுமென்று விரும்பினால், கிடைத்த பொருளை வறியவர்களின் அறிவை அழிக்கின்ற பசியாகிய நெருப்பில் ஓமம் செய்து, அவர்கள் வயிற்றிலே சேமிக்க வேண்டும். அப்படிச் சேமித்த சேமநிதியை எந்தக் குளத்திலேயும் எடுக்கலாம். கைந்நீட்ட வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழ்

திருவள்ளுவர் குறளிலே முதலில் உள்ளது அறத்துப்பால். அறத்துப்பாலின் இறுதி அதிகாரம் ஊழ். ஊழென்றால் விதி. விதியாகிய ஊழ், ஆகூழ் போகூழ் என இரண்டு வகைப் படும். ஆகூழ் நன்மை ஆதற்குரிய ஊழ்; போகூழ் எல்லாம் போதற்குரிய ஊழ். ஆகூழில் எண்ணிய கருமங்கள் எல்லாம் எண்ணியபடியே முற்றும். "ஆங்காலம் மெய்வருந்த வேண்டா" என்பது ஔவையார் வாக்கு. இருந்தபடி இருக்க எல்லாம் வலிய வந்து வாய்க்கும்.

ஆகூழ் நடக்கிற ஆங்காலத்திலே, காற்றடிக்கிற பக்கமாக நடக்கிறது போல காரியங்கள் எளிதிற் சித்திக்கும். போங்காலம் பெரிய பிரசண்டமாருதத்தை எதிர்த்துச் செல்வ தாயிருக்கும்.

ஒன்று செய்ய விரும்புகிறவன் முதலில் தனது ஊழ் என்ன என்று விசாரிக்க வேண்டும். ஆகூழா? போகூழா? என்று நிச்சயிக்க வேண்டும். வேதத்தின் அங்கமான சாத்திரங்களுள் சோதிடம் ஒன்று. அந்தச் சோதிடம் ஒவ்வொருவருக்கும் உரிய ஊழைச் சொல்லும். இந்த ஊழ் நமது சம்பாத்தியமே. நாம் சென்ற பிறப்புக்களிலும், எடுத்த இந்தப் பிறப்பிலும் எத்தனையோ முயற்சிகள் செய்தோம்; செய்கின்றோம். முயற்சிகளில் நன்மையும் உண்டு; தீமையும் உண்டு. நன்மை தீமைகளே ஊழாய் விளைந்து திரண்டிருக்கின்றன. நெல்விதைத்தவனுக்கு, நெல் விளைவு அநுபவத்துக்கு வருவதுபோல, நாம் விதைத்த நன்மை தீமைகளும் விளைந்து ஊழாய் நமது அநுபவத்துக்கு வருகின்றன. நன்மையின் விளைவான ஆகூழை அநுபவிக்கும்போது சந்தோஷப் படுகிறோம். போகூழில் துக்கப்படுகிறோம். பெரியோர்கள் போகூழில் துக்கப்பட்டுக்கொண்டு, சோம்பிக் கிடப்பதில்லை. ஊழ் நமது சம்பாத்தியமே என்பதை அவர்கள் அறிவார்கள். போகூழையும் வெறுப்பின்றி அனுபவிப்பார்கள். அப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுபவிக்கும்போதே, அதை எதிர்த்து வெல்லுவதற்கும் முயற்சி செய்வார்கள். ஊழைச் சிருட்டித்தவர்கள் நாங்களே. நாங்கள் சிருட்டித்த ஊழை வெல்லுவதற்கும் எங்களிடம் வல்லமை உண்டு. ஆகூழில் ஒரு முயற்சியைச் செய்வதற்குரிய வல்லமையிலும் போகூழில் ஒரு முயற்சி செய்வதற்கு நூறுமடங்கு வல்லமை வேண்டும். ஊழை அறிந்த பெரியோர்கள், ஆகூழ் காலத்தில் சந்தோஷப் பட்டு, ஆரவாரஞ் செய்து, வல்லமைகளை வீணாக்காமல், சேகரித்து வைத்துக்கொள்ளுவார்கள். அப்படிச் சேகரித்த வல்லமைகளைப் போகூழ் காலத்தில் உபயோகித்துப் போகூழை வென்றுவிடுவார்கள். சாவித்திரியும் மார்க்கண்டேயரும் அதற்கு உதாரணம்.

ஊழ் அறத்தின் மூலவேர். அறஞ்செய விரும்பு பவர்கள், அறஞ்செய்ய விரும்புகின்ற தமது ஊழையும், ஆருடைய நன்மைக்குச் செய்யப் போகிறோமோ அவர்களுடைய ஊழையும் முதலில் விசாரித்துக் கொள்ள வேண்டும். ஊழை விசாரியாமற் செய்யுஞ் செயல்கள், நோயை விசாரியாமற் செய்யும் வைத்தியம் போல வீண் செயல்களாய் முடியும்.

"அரன்றன் பாதம் மறந்து செய் அறங்களெல்லாம் வீண் செயல்" என்பது சிவஞானசித்தியார். அரன்றன் பாதந்தான் ஊழை நடத்துவது. அதனை மறவாமை யாவது, ஊழ் இருந்த படியை உணர்ந்து, திருவருளின் குறிப்பின் வழி நடத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதி

"சாதி இரண்டொழிய வேறில்லை" என்கின்றார் ஔவைப்பிராட்டியார். ஒன்று நீதிச் சாதி, மற்றது அநீதிச் சாதி. நமக்கு அறிவு இருக்கிறது; அதனோடு கூட ஆசையும் இருக்கிறது. அறிவு நீதிச் சாதியைச் சேர்ந்தது; அழுக் கோடு கூடியது. ஆசையைச் சுத்தப்படுத்தி, அறிவின் வழிப் படுத்த வேண்டும். ஆசையை அறிவின் வழி நடத்துகிற வர்கள் நீதிச் சாதியை அடைகின்றார்கள். அவர்களே சாதி மான்கள்.

நாம் தெருவில் நடந்து செல்லுகின்றோம். வழியிலே ஒரு பணப்பை அகப்படுகின்றது. அந்தப் பணம் யாரோ ஒரு மனிதன் வெயர்வை யொழுகச் சம்பாதித்த தாகலாம்; அந்த மனிதன் தானும் தன் மனைவி மக்களும் உண்டு உடுத்து வாழ்வதற்குச் சிறிது சிறிதாகச் சேர்த்த தாகலாம். அன்று தவறிய அந்தப் பணப்பை நம்மிடம் அகப்பட்டுக்கொண்டது. அகப்பட்டதும் அறிவுக்கும் ஆசைக்கும் போர் மூளுகின்றது. அறிவு, "ஐயோ இந்தப் பணம் எந்த ஏழையின் சம்பாத்தியமோ? இதை இதற்குரியவரிடஞ் சேர்க்க வேண்டுமே" என்று நீதி சொல்லும். ஆனால், ஆசை என்ன சொல்லும் என்பதை விவரிக்க வேண்டியதில்லை. அது ஆகாயக் கோட்டை கட்டும்; நமது அதிர்ஷ்டத்தை வியக்கும். வியாபாரத் துறைகளிலும் குதிரைப் பந்தயங்களிலும் இந்த ஆசையின் முழு வடிவங்களையுங் காணலாம். இந்த ஆசை வழிப்பட்டவர்கள் அறிவை அழிக்கின்றார்கள்; அநீதிச் சாதியை அடைகின்றார்கள்.

நீதி, கடவுளின் வடிவு, "பங்கயத் தயனும் மாலும் அறியாத நீதியே" என்று கடவுளைத் துதிக்கின்றது திருவாசகம். நீதியைப் போற்றாதவர்கள் கடவுளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவத்தை நிந்திக்கிறார்கள். அறிவாளிகளின் கையில் "நிதி" அகப்பட்டால் அவர்கள் "நி" என்ற குற்றெழுத்தை நீட்டி, நீதி, ஆக்குகின்றார்கள். அவர்கள் நீதியைக் குறுக்கி நிதி செய்வதில்லை; நீதியை விற்று நிதி வாங்கு வதில்லை.

தேசம் வறுமை அடைகின்ற காலத்திலே வள்ளல்களிடம் நிதி சேரும். ஆனால், அவர்கள் நிதியைக் குறிய வடிவில் வைத்திருப்பதில்லை. நிதியை நீளச் செய்து, நீதி ஆக்கிவிடுவார்கள்.

நீதி தெரியாதவர்களிடம் நிதி சேரும் ஆனால், அந்த நிதி அவர்களைக் கெடுத்துவிடும். அவர்கள் வழக்குகளிலும் கொலை முதலிய துட்டச் செயல்களிலும் நிதியைச் செலவு செய்து இம்மை மறுமை இரண்டையும் இழந்து நரகத்துக்கு ஆளாகின்றார்கள்.

நிதியை நீதி செய்தவர்களின் சந்ததியிலே ஒரு காந்தி, ஒரு நேரு வந்து பிறக்கலாம். அவர்களுடைய சந்ததியால் உலகம் தழைக்கும். ஒருவன் தன் சந்ததிக்குச் சம்பாதித்து வைக்கும் பொக்கிஷம் வெறும் "நிதி" யன்று; நீதி.

நிதியை நீட்டி நீதி செய்பவர்கள், சீவன் குறுகிச் சிவன் ஆவார்கள். நீதியோடு சம்பந்தஞ் செய்கிறவர்கள், சிவத்தோடு சம்பந்தஞ் செய்கிறார்கள். அவர்களே சைவர்கள். நீதிக்குச் சைவம் என்பது மற்றொரு பெயர்.

"மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலக மெல்லாம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை

கலை என்றால் என்ன? சற்றே சிந்திப்போம்.

உலகத்தின் வியத்தகு தோற்றங்களைக் கவிஞர்கள் காவியங்களிலும், ஓவியர்கள் ஓவியங்களிலும், சிற்பிகள் சிலைகளிலும் அமைக்க முயலுகின்றார்கள். அந்த முயற்சிகள் முற்றுப்பெறாமல் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வளர்ச்சிகள் கலைச்சமுத்திரத்தில் எழுகின்ற அலைகளாயிருக்கும்.

மலை அடுக்கங்கள் - அருவிகளின் வீழ்ச்சிகள் - கடற் பரப்புக்கள் - வான வளைவு கள் - சந்திர சூரிய உதய அஸ்தமனங்கள் - சோலைகள் - என்றின்னோரன்னவைகளை நேரிற் கண்டு பலர் களிக்கின்றார்கள்; இன்பந்துய்க்கின்றார்கள்.

இங்ஙனமாகக் கவிஞர்கள் முதல் நேரிற்கண்டு களிப்பவர் பரியந்தம், இங்கே குறிப்பிட்டவர்களெல்லாம், கலை அநுபவம் படைத்த கலைஞர்கள் என்று கருதப்படுகின்றார்கள்; மனச்சாந்தி படைத்தவர்கள் என்று நினைக்கப்படுகின்றார்கள்.

கலைஞர்கள் மனிதர்களுக்குள் அதிமனிதர்கள்; மதிப்புக்குரியவர்கள். ஆனால் அவர்களிடமுங் கவலை குடிகொண்டு விடுகின்றது. கலைஞர்கள் தம்பால் அணுகுகின்றவர்களைத் தமது கலைப் பொக்கிஷங்களாற் களிக்க வைக்கின்றார்கள். ஆயினும், சிலசமயங்களில், கலைஞர்களுங் கவலை கொள்ளுகின்றார்கள். ஒரு தந்திக்காரன் வேகமாக வருகின்றான். அவனைக் கண்டதுங் கலைஞர்களுங் கலங்கிவிடுகின்றார்கள். கலையுங் கவலைக்கிடமானதா? உண்மைக் கலை என்றாலென்ன?

நமது நிழல் வளர்ந்து நீளுகின்றது. பின் அவ்வாறே குறைந்து ஒடுங்குகின்றது. குறிப்பிட்ட காலத்தில் எல்லாருடைய நிழலும் வளர்ச்சியிலும் ஒடுக்கத்திலும் ஓர் அளவைக் கொண்டிருக்கிறது. நீண்ட மனிதன் தன் நிழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அடியால் பத்தடி என்கின்றான். அதே சமயம் குறுகிய மனிதனும் தன்னிழல் தன்னடியால் பத்தடி என்கின்றான்.

கலை என்ற தத்துவத்துக்கு மேலே காலம் நியதி என்ற இரு தத்துவங்கள் இருக்கின்றன. குறிப்பிட்ட காலத்தில் ஒரு நியதிக்குட்பட்டு நிழல் வளர்வதும் தேய்வதும் போலவே பல்வேறு விசித்திரமான உலகத் தோற்றமும், ஒரு நியதிக்குட்பட்டே வளருகின்றது; ஒடுங்குகின்றது. அந்த நியதி யாது? அதுதான் திருவருட் குறிப்பு; சிவ சக்தியின் திருவிளையாட்டு. அது நீதி மயமானது. நீதி மயமான நியதிப்படி உலகந் தோன்றி நின்று ஒடுங்குகின்றது. நியதியான திருவருட் குறிப்பை உணர்ந்தவர்கள், உலகத் தோற்றத்தைக் கண்டு மகிழ்வது போலவே உலகம் ஒடுங்கும் முறையில் ஒடுங்குவதையுங் கண்டு களிக்கின்றார்கள்; நீதியாகிய நியதியை வியக்கின்றார்கள்.

நியதியை உணர்ந்தவர்கள் கல்யாண வீடு போலவே அந்தியகாலச் சடங்குகளையுங் காணுகின்றார்கள். அபிமந்யுவுடன் இறக்க முயல்கின்றான் அவன் தந்தையாகிய அருச்சுனன்; மாமனான கண்ணன் அப்படிச் செய்யவில்லை. அபிமந்யுவின் தோற்ற வளர்ச்சிகளைக் கண்டு மகிழ்ந்தது போலவே, அபிமந்யுவின் ஒடுக்கத்துக்கும் மகிழ்கின்றான் கண்ணன். அபிமந்யு இந்த உலக பந்தங்களை உதறிக்கொண்டு உயர்நிலை உறுவதைக் கண்டு களிகூருகின்றான் அந்தக் கண்ணன். கண்ணன் நியதி என்ற தத்துவத்தை நன்கு தெரிந்தவன்.

கண்ணீர் வடித்துக் கலங்குகின்றான் அர்ச்சுனன். கண்ணில் நீரே வாராமல், கலக்கமின்றி இருக்கின்றான் கண்ணன். இந்த இருவரில் யாவன் பரிபூரண கலைஞன்! கலை என்றால் என்ன!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம்

உலகம் என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் வழங்குகின்றன. ஒரு பொருள் உயர்ந்தோர்; மற்றப் பொருள் உலகத்திலுள்ள சாதாரண மக்கள்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" வேண்டுமென்கிறார் திருவள்ளுவநாயனார். நாயனார் குறிப்பிட்ட உலகம் எது? சிந்திப்போமாக. நம்முடைய ஒழுக்கம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும்? நாம் யாருடைய ஒழுக்கத்தைப் பார்த்து ஒழுகவேண்டும்? இந்த வினாக்களுக்கு விடை வெளிப்படை. நாம் உயர்ந்தோர்களையே பின்பற்ற வேண்டும். அவர்களுடைய அடிச்சுவட்டையே தொடர வேண்டும். திருவள்ளுவர், ஔவையார் போன்ற சான்றோர்களின் வாக்குக்களையே நோக்கி நடக்க வேண்டும். அவர்கள் நடந்த வழியில் நடக்க வேண்டும். அவர்களோடு ஒட்டவேண்டும். அவர்கள் ஒழுக்கத்தோடு ஒட்டிக்கொள்ளும்படி ஒழுகவேண்டும்.

ஒருவன் உயர்ந்தோர்களைப் பின்பற்றி, அவர்கள் கொண்ட ஒழுக்கங்களைத் தானுங் கைக்கொண்டு ஒழுகுகின்றான் என்று வைத்துக்கொள்ளுவோம் அப்படிப்பட்டவன் சாதாரண உலக மக்களோடு எவ்வாறு ஒழுகவேண்டும்? அவர்களோடு ஒட்டலாமா? என்பது பெரிய கேள்வி; விடுவிக்கவேண்டிய கேள்வி.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல்" என்ற தொடரிலே, சாதாரண உலக மக்களோடு எவ்வாறு ஒழுக வேண்டும் என்பதற்கும் வழிவகுத்திருக்கிறார் திருவள்ளுவநாயனார். அத் தொடரின் பொருளை மற்றொரு பிரகாரம் நோக்குவோம். உலகத்தோடு - சாதாரண மக்களோடு, அவர்கள் உன்னைத் தொடர்ந்துவந்தால் - உன்னோடு ஒட்டிக்கொள்ள அந்தச் சாதாரண மக்கள் முயன்றால், "ஒட்ட" - அவர்கள் உன்னோடு ஒட்டிக்கொள்ளும்படி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் ஒழுகலாறுகளை அவர்கள் கைப்பற்றிக் கொள்ளும் படி, அவர்களை உதறித் தள்ளாமல், "ஒழுகல்" - நீ ஒழுகுதலைச் செய்.

நீ எப்படி உயர்ந்தோர்களோடு ஒட்டிக்கொள்ள முயலுகின்றாயோ, அவ்வாறே சாதாரண மக்களும் உன்னோடு ஒட்டிக்கொள்ள முயல்வார்கள். அது நீதி.

சாதாரண உலக மக்கள் உன்னொழுக்கத்தைத் தொடர முயலும்போது நீ அதற்கு இடங்கொடுக்க வேண்டும்.

முத்திரை தன் முதுகுப் புறத்திலே பசை வைத்திருக் கின்றது. தபாலுறை அந்தப்பசை யைப் பற்றிக்கொண்டு, முத்திரையோடு ஒட்டுண்டு, விலை மதிப்புடைய தாகின்றது. முத்திரை திரும்பிநின்று, முகப்பக்கத்தால், உறையில் ஒட்டுவதில்லை. அப்படித் திரும்பி முகம் குப்புறக் கவிழ்ந்து ஒட்டுமானால் அது தன் விலையை இழந்துவிடும். உறையின் விலையே முத்திரையின் விலையுமாய்விடும்.

முத்திரையின் முதுகுப் பசைபோல் அன்புப் பசை ஒருவனுக்குப் பின்புறத்திலுங் கசிய வேண்டும். அந்தக் கசிவு சாதாரண மக்கள் ஒட்டிக்கொள்ளுதற்கு வசதி யளிப்பதாயு மிருக்க வேண்டும். சாதாரண மக்களைத் திரும்பிநின்று ஒட்டுதல் கூடாது. ஒருவன் சாதாரண மக்களை வலிந்து தொடர்ந்தால், தலைகவிழ்ந்தொட்டிய முத்திரை போன்றவனாய், அவன் தன் விலையை இழந்துவிடுகின்றான். ஆகையால், மனிதனே, நீ உயர்ந்தோரை ஒட்டி ஒழுகு; சாதாரண மக்கள் உன்னை ஒட்டி ஒழுக இடங்கொடு. நீ உன் விலையை இழந்து விடாதே. நீ சான்றோரினத்திரு. அப்படியிருப்பாயானால், சாதாரண மக்களுக்கு நீ பயன்படுவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றுக்கள்

மனிதனை இயமன் கொல்லுவதில்லை. மனிதன் தன்னைத்தானே கொல்லுகின்றான். பற்றுக்கள் மனிதனைக் கொல்லுகின்றன. பற்றுக்கள் எப்படி மனிதனைப் பற்றிக் கொண்டன என்பதை ஆராய்வதிற் பயனில்லை. மனிதன் எப்பொழுது உலகத்தில் தோன்றினானோ, அப் பொழுது அவனுடன் பற்றுக்கள் தோன்றி வளருகின்றன. பற்றுக்களுக்கு ஆசை என்பது மற்றோரு பெயர். "ஆசைக்கோர் அளவில்லை" என்பது தாயுமானவர் வாக்கு. ஆசையை அடக்குவது அரிது. "அடக்கடக்கென்பர் அறிவிலார்." ஆசைகள் தாமே அடங்குதற்கு உபாயஞ் செய்தல் வேண்டும்.

முதலாவது உபாயத்தைத் திருவள்ளுவர் சொல்லித் தருகின்றார். அந்த உபாயமாவது,

> "தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
> துன்னற்க தீவினைப் பால்"

என்பது. ஒருவன் தன்னிடத்திலே தான் பற்றுள்ளவனா யிருக்கவேண்டும். அப்படித் தன்னிடத் திலே தான் பற்றுள்ளவன் ஆனால், அவன், எத்துணைச் சிறிய தொன்றாயினுந் தீமையைப் பிறர்க்குச் செய்யாதொழிக என்கிறார் திருவள்ளுவநாயனார்.

"நீ உன்னிடத்திலே பற்றுள்ளவனாயிரு" என்ற போதனையை யாவரும் ஏற்றுக்கொள்ளுவர். அதனைத் தானே அநுட்டித்துக்கொண்டு வருகின்றோம் என்றுஞ் சொல்லுவார்கள். அப்படிச் சொல்லுகிறவர்களைத் திருவள்ளுவர் நோக்கி, நீங்கள் உங்களிற் பற்றுள்ள வர்களானால், பிற உயிர்க்கு எள்ளளவேனுந் தீமை செய்ய முடியாதென்கிறார். பிற உயிர்க்கு எவன் தீமை செய் கின்றானோ, அவன் தன்னிடத்திலே தனக்குப் பற்றில் லாதவன் என்பது திருவள்ளுவர் கருத்து. எவன் பிற உயிர்க்குத் தீமை செய்கின்றானோ, அவன் தனக்கே தீமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றான். ஆகவே, நாம் நம் நன்மையின் பொருட் டாகவே, பிற உயிர்க்குத்தீங்கு சிறிதும் விளையாமல், நாம் விரும்பிய பற்றுக்களை அநுபவிப்பதென்று நிபந்தனை செய்துகொள்ள வேண்டும். மனமே. நீ விரும்பும் பற்றுக்களை அனுபவி; நன்றாக அனுபவி. இரண்டாம் உயிர்க்கு அதனால் தீங்கு வரக்கூடாது. பிற உயிர்க்குத் தீங்கு செய்யாமை பெரிய நீதி. அந்த நீதியை மனம் ஒத்துக் கொள்ளும்படி, கணந்தோறும் சந்தர்ப்பங்கள் தோறும் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். மற் றொரு உயிர் நம்மால் துன்பப்பட்டு ஒரு மூச்சுவிட்டாலும், அந்த மூச்சு நமது குடியை எரித்துச் சாம்பலாக்கிவிடும் என்பது எப்பொழுதும் ஞாபகத்திலிருக்க வேண்டும். எங்கும் எழுதித் தூக்கவேண்டும். "ஏழை யழுத கண்ணீர் கூரிய வாள்" என்பதை நடந்த சம்பவங்களிலே இதிகாசக் கதைகளிலே கண்டுகொள்ள வேண்டும்.

இவ்வாறு பழிக்கஞ்சி ஒருவன் பற்றுக்களை அனுபவிப்பானானால், அவன் செய்யும் வினைகள் எல்லாம் தீவினைகள் ஆகாமல் நல்வினைகள் ஆகும்.

மனிதன் செயல்களை எல்லாம் என்றைக்கு நல்வினைகள் ஆக்குகின்றானோ, அன்றைக் குத்தான் அவன் உண்மை மனிதன் ஆகின்றான்.

அப்படிப்பட்ட மனிதன் நல்வினைகளும் பற்றுக்க ளே என்பதை மெல்ல மெல்லச் சிந்திப்பான். நல்வினை களாற் சம்பாதிக்கும் சுவர்க்கம் முதலிய புண்ணிய உலகங்களும் நிலையில்லாதவை என்பதை ஒருநாளைக்கு உணர்வான். அந்த உணர்ச்சி அவனுக்கு மோஷத்தை நல்கும். மனிதன் தொடக்கத்தில்,

"தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்"

என்ற அருமை மந்திரத்தையே பின்பற்றக் கடவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழூதூண்

"தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாள்தந்தது
உண்ணலி னூங்கினிய தில்"

என்பது திருவள்ளுவர் வாக்கு. தாள்தந்தது - நீதியான தனது சொந்த முயற்சியினால் வந்தது, தெண்ணீர் அடுபுற்கையாயினும் - தெளிந்த நீரையே மிகுதியும் விட்டுச்சமைத்த கஞ்சியாயிருந்தாலும், அந்தக் கஞ்சியை உண்டு திருப்தியடைதல் ஒருவனுக்கு நல்லது.

"தாள்தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்" தாள் - முயற்சி. தன் சொந்த முயற்சியால் வந்ததை உண்ணுதலினும் பார்க்க இனிய உணவு - நன்மை பயக்கத்தக்க உணவு - பிறிதொன்றும் இல்லை.

"அருளொடும் அன்பொடும் வாரப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"

என்பது மற்றொரு அருமைத் திருக்குறள். அருளாகிய நீதிக்கும், தயை ஆகிய அன்புக்கும் மாறாக ஒரு பொருள் வருமானால், அந்தப் பொருளைக் கையினாலே தீண்டுதலும் ஆகாது, என்பது இத் திருக்குறளின் கருத்து.

வந்தவெள்ளம் நின்ற வெள்ளத்தையுங்கொண்டு போவது போல அநீதியான வழியிலே வருகிறபொருள், ஒருவனிடம் இருக்கிற புண்ணியத்தையும் அழித்துக் கொண்டு போய்விடும். "அழக்கொண்ட எல்லாம் அழப்போம்" பிறர் அழ அழச் சம்பாதித்த பொருள், பிறகு நாம் அழ அழ நம்மிடம் இருந்த பொருளையும் அள்ளிக்கொண்டு போய்விடும்.

நாம் அனுபவிக்கும் பொருள் இம்மையிலும் மறுமையிலும் நமக்கு நன்மை பயக்க வேண்டும்; நமது சந்ததியை உய்யவைக்க வேண்டும்.

பொருள்கள் அனைத்திலும் உழவினாலே உடல் வருந்திச் சம்பாதித்த பொருளே உண் ணத்தக்க உறுதிப் பொருள் என்று உண்மைஞானிகள் கண்டு நமக்கு உபதேசித்திருக் கின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் "அன்னத்தை அறி" என்கின்றது. நுகரப் படும் பொருள் தூய்தாக இருக்கவேண்டும் என்பதே அதன் கருத்து. தூய்மையில்லாத உணவை உண்டால் - அறமல்லாத வழியில் வந்த பொருளை நுகர்ந்தால் அப்ப டிப்பட்ட உணவு ஞானத்தை அழித்துவிடும். அறி வாளிகள் உழுதுண்டு வாழ்தலை மிகுத்துப் பாராட்டி யதன் காரணம் பெரிதுஞ் சிந்திக்கற்பாலது. அறிவு பயன் படுதற்கு அப்படியான வாழ்க்கைதான் உபயோகமானது.

கல்வியினாலாய அறிவுவிருத்திகள் இப்பொழுது உத்தியோகங்களுக்கு அர்ப்பணஞ் செய்யப்படுகின்றன. யோசித்துப்பார்த்தால் உத்தியோக வருமானம் வயிற்றை வளரச் செய்வதற்கன்றி வேறு எந்த வளர்ச்சிக்கும் உதவாது. உத்தியோக வருமானத்தால் உண்ணும் ஊண்தொழுதூண் என்பது வெளிப்படை. அறிவைக் கொலைசெய்து உண்ணுகிற ஊண் ஒன்று இருந்தால், அதுதான் உத்தியோக ஊணாய் முடிந்தது. சிந்திக்கக் கூடியவர்கள் இனித் தமது சந்ததியாவது தப்பி உய்தற்கு வழிகாண வேண்டும். சந்ததியை ஆற்றங்கரையில் மரம்போல வாழும்படி வைப்பது பெரியபாவம்.

"இலம்என் றசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்"

என்பது மற்றொரு தெய்வக் குறள். நாம் வறுமைப் பட்டுப் போனோம் என்று சொல்லுகிற சோம்பர்களைப் பார்த்து நிலம் என்கின்ற பெண் சிரிக்கின்றாளென்பது இக்குறளின் கருத்து. "நல்லாள்" என்ற பெயர் நிலத்துக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. பூமிதேவி நல்லவள். அவள் எங்கள் தாய். அவள் எல்லாரையுந் தாங்குபவள். மனிதனே நீ, "பூமி திருத்தி யுண்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்கண்டார்

காடுகளும் சிறு சிறு மலைகளும் செறிந்த ஓர் இடத்திலே, அங்கும் இங்கும் சிதறுண்டு கிடக்கின்ற பல சிறு கிராமங்களுக்கு மத்தியிலே, யானைப்பாகன் ஒருவன் ஒரு பெரிய யானையைக் கொண்டுவந்து நிறுத்தினான். அந்த யானையினுடைய ஒரு காலின் பொய்த் தோற்றத்தை மாத்திரந் தூரத்திலிருந்து கண்ட ஒரு கிராமத் தவர்கள். "அங்கே ஒரு உரல் நிறுத்தப்பட்டிருக்கிறது" என்றார்கள். துதிக்கையின் பொய்த்தோற்றத்தை மாத்திரங்கண்ட மற்றொரு கிராமத்தவர்கள், "உரல் இல்லை; அது உலக்கை" என்றார்கள். வேறொரு கிராமத்த வர்கள் காதின் பொய்த் தோற்றத்தை மாத்திரங் கண்டவர்கள் - "அது உரலும் இல்லை; உலக்கையு மில்லை; அது சுளகுதான" என்றார்கள். அவர்களுக் குள்ளே பெரிய கலகம் உண்டாய் விட்டது; தீராத கலகம்.

அந்தக் கிராமங்களில் உள்ள சில புத்திமான்கள், உரல், உலக்கை, சுளகு ஆகிய தோற்றங்களை ஆராய்ந்து, அந்தப் பொய்த் தோற்றங்களுக்கு மூலமாயிருந்த, கால் - கை - காது என்கின்ற மெய்ப்பொருள்களைக் கண்டு பிடித் தார்கள். அவர்கள் அவ்வளவிலும் நில்லாமல் மேலும் ஆராய்ந்து, யானையின் மேலிருந்த பாகனைச் சந்தித்து, தாம் முன்கண்ட கால் - கை - காது என்பவைகள், ஒரு முழுப் பொருளின் உறுப்புக்கள் என்பதை உணர்ந்து முழுப் பொருளாகிய யானையைக் கண்டு, ஒருவரை ஒருவர் கொண்டாடிக் குதூகலித்தார்கள்.

நாம் காணுகின்ற இந்தப் பிரபஞ்சத் தோற்றத்தை மெய்ப் பொருளென்று கொண்டாடுகிறவர்கள், யானை யின் உறுப்புக்களை உரலென்றும் உலக்கையென்றும் சுளகென்றும் கண்டவர்கள் போன்றவர்களே; இவர்கள் பொய்ச் சமயிகள்; புறச் சமயிகள்; தீராத கலகக்காரர்கள்.

பிரபஞ்சத் தோற்றங்களை ஆராய்ந்து, அவற்றின் மூலங்களாகிய மெய்ப்பொருளைக் காணுகிறவர்கள், யானையின் உறுப்புக்களாகிய கால், கை, காதுகளை உள்ளபடி கண்டவர்கள் போன்றவர்கள்; அவர்களே மெய்ச் சமயிகள்; அகச் சமயிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையின் உறுப்புக்களைக் கண்டவர்கள் மேலும் ஆராய்ந்து யானையின் முழு உரு வத்தைக் காணுவது போல, அகச்சமயிகளும் தத்தஞ் சமய நெறிவழிச் சென்று ஆராய்ந்து முழு உண்மையைக் காணுவார்கள். அகச்சமயிகளுக்குட் கலகமில்லை; கலந்து கொண்டாடு வார்கள்.

பொய்த் தோற்றத்துக்கு மூலம் மெய்த்தோற்றம். பொய்த் தோற்றம், மெய்த் தோற்றமும் அன்று; அதில் வேறானதுமன்று. தோன்றுகின்ற பிரபஞ்சம், கடவுளும் அன்று: கடவுளில் வேறானது மன்று. பிரபஞ்சத்தைக் காணுகின்ற ஆத்மாவும் கடவுளுமன்று; கடவுளில் வேறானதுமன்று. இப்படிப்பட்ட நிலைக்கு "அத்துவிதம்" என்று பெயர். இந்த உலகமும் உயிரும் கடவுளோடு அத்துவிதப்பட்டிருக்கின்றன. இந்த அத்துவித நிலையை, பொய்த்தோற்றங்களைக் கண்டு மயங்காது, மெய்யாகவே- புனிதமாகவே - கண்டவர் மெய் கண்டார்.

"மெய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்டார்"

என்று வாயூறுகின்றார் தாயுமானவர்.

மெய்கண்டாரின் பிள்ளைத்திருநாமம் சுவேதவனப் பெருமாள். இவர் திருவெண்ணெய் நல்லூரில் அவதரித்தார்; திருவருட்சார்பினாலே, பாலொழுகும் பராயத்திலேயே, திருஞானசம்பந்தப்பிள்ளையார் போலவே, புனிதமான அத்துவித மெய்கண்டாராயினார்.

மெண்கண்டார் தாங்கண்ட அத்துவித உண்மை களை, ஒரு சிறு குழந்தையின் உள்ளங்கையில் எழுதிக்காட்டக்கூடிய, சின்னஞ்சிறிய பன்னிரண்டு சூத்திர ங்கள் மூலம் போதித்தருளியிருக்கின்றார். அந்தப் போதனைக்குச் சிவஞானபோதம் என்று பெயர். அதிலிருந்து சித்தித்ததுதான் சிவஞான சித்தியார். அதிலிருந்து பிரகாசித்தது சிவப்பிரகாசம். இவை மூன்றும் மும்மலங்களையும் போக்கும் மூன்று மணிகள்.

மெய்கண்டதேவர் திருவடி வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் இந்தச் சரீரம் கிடைத்ததன் நோக்கத்தை விசாரியாது, பற்றுக்களுக்கு அடிமையாய் விட்டான்; வெகு தூரம் பற்றுக்களுக்குப் பிறகே போய்விட்டான். அதனாலே, தன் கருத்துக்களைக் கடவுளின் கருத்துக்கள் - கடவுளுக்கு உடன்பாடானவைகள் - என்று சொல்லவுந் தொடங்கிவிட்டான்.

பற்றுக்களை அடக்க முடியாது; அவை தாமே அடங்கவேண்டும். அதற்கு ஒரே ஒரு உபாயம். பற்றுக்களைத் தர்ம வழியிலே வழிப்படுத்துவது. தர்மமாவது திருவருட் குறிப்பு. அது வேதாதிகளிற் பேசப் பட்டது.

தர்மம் மிகமிக நீளமானது. அதன் இறுதி மோஷம். மோஷமாவது மெய்ச்சார்வை உணர்ந்து, பொய்ச் சார்புகள் விடுபட ஒழுங்குவது. தர்மம் இந்த நிலைக்கு வந்து முற்றுப் பெறுமானால், அந்த நிலைக்கு அறம் என்று பெயர்.

அறமாவது திரிகரணசுத்தி, "மனத்துக்கண் மாசிலனாதல்"

"புன்னெறி யதனிற் செல்லும் போக்கினை" விலக்குதல் தர்மம். "மேலாம் நன்னெறி ஒழுகல்" அறம். அறங் கைவந்த மனந் தூயர் ஆனவர்களுக்குப் பொருள் தெரியும். பொய்ம்மை இது; மெய்ம்மை இது என்று அறிவார்கள். உலகம் அவர்கள் உள்ளங்கைக்கு வந்து விடும். உண்மையைக் காண்பார்கள். அவர்களுடைய காட்சி "நவையறுகாட்சி". நவை - குற்றம்.

நவையறு காட்சி கைவந்து மெய்ப்பொருள் தெரிந்தவர்கள், அப்பொருளைப் பிரிந்துவாழ இயலா தவர்களாய், அப்பொருளோடு ஒன்றுபடுகின்றார்கள். அதற்கு "மீளா அடிமை" ஆகின்றார்கள். அதனை அனுபவிக்கின்றார்கள். அதுதான் ஒப்புயர்வில்லாத இன்பம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பந் தலைப்பட்டவர்கள். சுவர்க்காதி பயன் களைத் தருகின்ற நல்வினைகளையும், தீவினைகளோடு ஒப்பமதித்து வெறுக்கின்றார்கள். அவர்களுக்கு "இருவினை ஒப்பு" உதிக்கின்றது; வீடு தலைக்கூடுகின்றது. தாடலைப்படுகின்றார்கள்.

அறம் பொருள் இன்பம் வீடு, அரும்பு மலர் காய் கனி. அறத்துக்கு மூலந் தர்மம். தர்மத்துக்கு வெகு தூரத்திலுள்ளவைகள் பற்றுக்கள். பற்றுக்கள் எண்ணிறந் தவைகள். ஒவ்வொரு நரம்புத் துய்க்கும் ஒவ்வொரு பற்றுச் சொல்லலாம்.

சூரபத்மா முதலிய அசுரர்கள் "தர்மம் என்று ஒரு பொருள் உளது" என்பதை உணராது, பற்றுக்களின் வழியில் முழுகிக் குதிக்கின்றார்கள்.

இந்திரன் முதலிய தேவர்கள் - தஷப்பிரசாபதியை உள்ளிட்டவர்கள் - அப்பாற் சென்றுகொண்டு இருப்பவர் களேயாயினும், இடையிடையே தர்மத்தை விலகிப் பற்றுவழிப்பட்டுத் தவிக்கின்றார்கள்.

ஜனகாதி முனிவர்கள் சார்பு "உணர்ந்து சார்புகெட" ஒழுகுவதில் நிலைக்கும் பொருட்டுக் கல்லால விருக்ஷ நீழலில் அறங் கேட்கின்றார்கள்.

பிரம விஷ்ணுக்கள் சில சமயங்களில் அறத்தை விலகிப் பொருள் தலைப்படாமல், அடிமுடி தேடி, மெய்ப்பொருள் காண முயலுகின்றார்கள்.

வள்ளிநாயகியார் பொருள் உணர்ந்து, மெய்ப் பொருளோடு ஒன்றுபட்டு, ஐம்புல வேடர்களை விலகி இன்பந் தலைக்கூடுகின்றார்.

தெய்வநாயகியார் இன்பந் தலைக்கூடித் தாடலைப் பட்டு, "நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றநிலை முற்றுப்பெற்று,

"ஊருணி உற்றவர்க்கு ஊரன் மற்று யாவர்க்கும் ஊதியம்" என்கின்ற முடிந்த அன்புத் துறை நிறைவு ஆகி, திருவருள் வெள்ளமாய்ப் பிரவாகிக்கின்றார்.

சிவம் இருந்தபடி இருக்கச் சிவசத்தியின் சந்நிதியில் ஆத்மாக்கள் பற்றுக்கள் தொடக்கம் வீடு இறுதியான நிலைகளிற் சஞ்சாரஞ் செய்கின்றன.

இவ்வாற்றல் சூரபத்மா முதல் தெய்வநாயகியார் இறுதியான பாத்திரங்களையும், இன்னும் எத்தனையோ எண்ணிறந்த பாத்திரங்களையுந் தன்பாற்கொண்ட கந்தபுராணம் என்கின்ற தேவகங்கை, ஆத்மாக்களின் செல்கதியைப் பேசுவதாய், அவைகளை அவ்வக் கதிகளிற் செலுத்துவதாய், ஒப்பு உயர்வு இன்றி விளங்குகின்றது.

இத்துணைப் பெருமையிற் சிறந்த கந்தபுராணம், இப்பூவுலகத்திலே நாவலந் தீவிலே பாரத வருஷத்திலே பரதகண்டம் என வழங்குகின்ற குமரி கண்டத்திலே மிக்குப் பயின்று வழங்கியதொரு ஷேத்திரம் உண்டு என்றால், அந்தப் புண்ணிய ஷேத்திரம் இந்த யாழ்ப்பாணமே.

ஒருகாலத்திலே இந்த யாழ்ப்பாணத்திலுள்ள ஆடவர்கள், மகளிர்கள், முதியவர்கள், இளையவர்கள் ஆகிய எல்லாருடைய இரத்தத்திலுங் கலந்து, நரம்புத் துய்கள் தோறும் ஊறிச் சுரந்து கொண்டிருந்தது கந்த புராணம்.

இதனாலே, யாழ்ப்பாணத்திலே அந்நிய கலாசாரங்கள் - மிலேச்ச கலாசாரங்கள் - ஊற்றெடுத்தல் ஆற்றாது, தாமரையிலையில் நீர்போல் உருண்டு புரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாக்கடையில் ஓடுவ ஆயின.

ஆனால், இப்பொழுது கல்வி முதலிய பல்வேறு துறைகளில் யாழ்ப்பாணம் போகிற போக்கைத் தலைகுனிந்து பார்த்தால்,
இனி

"மையார் களத்தார் வரம்பெற்ற சூரனுக்குச்
செய்யாதே ஏவல்எலாம் செய்தோம் நெறிநீதி
எய்யாத மானம் இவையெல்லாந் தானிழந்தோம்
ஐயா மிகவும் அலுத்தோம் அலுத்தோமே"

என்ற பாடலை முகாரி இராகத்திற் பாடி, சுரம் பண்ணிச் கொண்டிருக்கத்தான் நேரும் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் வழிபாடு

கோயிலுட் பிரவேசிக்க முன், உயிர்க்கும் இறைவனுக்கு முள்ள தொடர்பை விசாரிப்பது நல்லது. தொடர்பை அறிவது சமயத்தின் அடிப்படையான மூல உண்மையை அறிவதாயிருக்கும்.

இறைவன் உயிர்க்குயிர். உயிர் இறைவனை விலகி இருப்பதில்லை. இறைவன் உயிர்க்குயிராய் இருந்து கொண்டே எங்குமாயிருப்பன்; ஆகாசம்போல.

இறைவனை "அத்துவித வஸ்து" என்கின்றார் தாயுமானவர். அத்துவிதமாவது இரண்டற்ற இரு பொருட் கூட்டரவு. இறைவனுக்கும் உயிருக்குமுள்ள கூட்டரவு, நித்தியமான கூட்டரவு.

இறைவன் அநாதியிலேயே உயிரோடத்து விதப்பட்டிருக்கின்றான். அப்படியிருந்தும், உயிரானது இறைவனோடு அத்துவிதப்படுகின்றிலது.

உயிர் இறைவனோடு அத்துவிதப்படுகின்றிலது என்றகருத்து, சதாகாலமுஞ் சிந்தனையில் இருத்த வேண்டிய கருத்து; முக்கியமான கருத்து.

ஏன் உயிர் இறைவனோடு அத்துவிதப்படு கின்றிலது? என்பது பெரிய கேள்வி.

உயிர் அநாதியிலேயே அறியாமையாகிய ஆணவ இருளில் அத்துவிதப்பட்டிருக்கின்றது. உயிர், இருளில் அத்துவிதப்பட்டிருக்கின்றது. உயிர், தன்னோடத்து விதப்பட்டிருக்கும் இறைவன், பேரொளிப் பிழப் பாயிருந்தும் குருடுபட்டுக்கிடக்கின்றது. பேரொளியைத் தாங்கும் ஆற்றல் உயிர்க் கின்மையின், பேரொளியும் இருள்செய்து விடுகின்றது.

"ஒளியும் மிக இருளே" என்கின்றது திருவருட் பயன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவ இருளுடன் இறையொளியும் இருள் செய்வதானால் உயிரின் நிலை என்னாகும்! உயிர் படுகுருடாய் விடுகின்றதே.

இனி உயிர்க்கு உய்தியில்லையா? உண்டு! உண்டு!

இறைவன் நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதன். நட்டம் - நடனம்; பஞ்சகிருத்திய நடனம். அந்த நடனப்பேறே

"இந்தச் சரீரம்" (இது மூக்குக் கண்ணாடியோடு ஒப்பிடத்தக்கது.)

இறையானது தனது பேரொளிப் பிழம்பைத் தணிக்கைசெய்து மிருதுவானதொரு அருள் ஒளிக் கிரணத்தைச் சரீரமூலம் உயிர் அறிவோடு அத்துவிதப் படுத்தி உயிர் அறிவு அபிவிருத்தியாதற்கு உபகரிக் கின்றது.

கண்புறவொளியோடு, அத்துவிதப்பட்டு, அவ் வொளி காண்பதைத் தானுங் காண்பதன்றி, தானாக ஒன்றையுங் காணாது.

அவ்வாறே உயிரறிவு சரீரமூலம் அருள் ஒளிக் கிரணத்தோடு அத்துவிதப்பட்டு, அது அறிவதைத்தானும் அறிவதன்றி. தானாக ஒன்றையும் அறியாது.

உயிரின் அறிவு விருத்தி, உயிர் அறிவோடு அருள் ஒளிக் கிரணம் அத்தவிதப்படுவதிலே தான் தங்கி யிருக்கின்றது.

அருள் ஒளி, உயிரின் அறிவோடு அத்துவிதப் படுதற்கு இச் சரீரம் இன்றியமையாதது.

இச் சரீரம் பேரிருள் சிறிதே விலகுவதற்குக் கிடைத்ததொரு சிறு விளக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விடிவாம் அளவும் விளக்கு"
என்கின்றது திருவருட்பயன்.

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் பெருமான் வாங்கு. இவ் வசனத்தில் "கிடைத்தது" என்ற வார்த்தை மிக்க கருத்துள்ளது. சரீரம் இறைவனிடமிருந்து கிடைத்ததென்பது கருத்து.

இறைவனிடமிருந்து கிடைத்த சரீரத்தை இறைவன் கருத்தறிந்தே பயன்படுத்த வேண்டும்.

திருமூலர், "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த் தேனே" என்கின்றார்.

உயிரை வளர்த்தலாவது உயிர் தன்னோடு அத்துவிதப்பட்டிருக்கும் இறையோடு உயிராகிய தானும் அத்துவிதப்படுதற்கு வழி செய்தலாம்.

"இந்தச் சரீரம்" என்ற வசனத்தை மீண்டும் நினைவு கூர்ந்து, திருமூலர் கருத்தை அவ்வசனத்திலுங் காண்க.

சரீரம், நமக்குக் கிடைத்த கோயில். சரீரக் கோயிலைப் பேணுகின்ற முறையிற் பேணுதற்குப் பெரிய சாதனமாயிருப்பவைகள் பூமியிலுள்ள கோயில்கள். இக் கோயில்களில் தாமாக உண்டானவைகளும் உண்டு: உண்டாக்கப்பட்டவைகளும் உண்டு.

"புறத்திணை மருங்கிற் பொருந்தி னல்லது
அகத்திணை மருங்கில் அளவுத லிலவே"

என்பது தொல்காப்பியம். திணை ஒழுக்கம்.

புற ஒழுக்க புனித சாதனத்திலேதான், அக ஒழுக்கம் சாத்தியமாகும் என்பது கருத்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய வழிபாடு சாதனம்
அக ஒழுக்க விளைவு சாத்தியம்

"கிரியையென மருவுமவை யாவும் ஞானங் கிடைத்தற்கு நிமித்தம்" என்பது சிவப்பிரகாசம். ஆலயக் கிரியைகள் "ஞானசாதனம்" என்பது கருத்து.

ஒருவனுக்குக் கணிதம் வருமா என்பதைக் கணிதம் வல்ல ஆசிரியன், அம்மாணவன் கணித விடை காணச் செய்யும் கிரியைகளின் படிக்கிரமத்தில் வைத்துக் கணிக்கின்றான்.

திருஞானசம்பந்தப்பிள்ளையார், அபரசுப்பிர மணியர். தேவியிடம் ஞானப்பால் பருகியவர். பிள்ளை, தலந்தோறும் வழிபாடு செய்தாராயின், ஈழத்திலுள்ள திருக்கேதீசுவரம், திருக்கோணசு வரங்களை நினைவு கூர்ந்தாராயின், அகவிருத்திக்கு ஆலய வழிபாடு எத்துணை வேண்டப்படுவ தென்பது அறியத்தக்கது.

பதஞ்சலி, வியாக்கிரபாதர் சிவயோகந் தலைக் கூடுபவர்கள். அவர்களே ஆலய வழிபாட்டுக்கு வழி காட்டிகளாய் விளங்குவார்களாயின், அதன் பெருமை யைக் கணிப்பது எங்ஙனம்!

புணர்ந்தாற் புணருந்தொறும் புதிதாய் நடக்கும் வீடுபேற்றுக்கு முக்கிய சாதனம் ஆலய வழிபாடு. அதுவும் புணர்ந்தாற் புணருந்தொறும் புதிது புதிதாய் நடக்கற் பாலதாம்.

எல்லாமறிந்த உலக அன்னையின் வாக்கு
"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்ம சிந்தனை

மனக்கவலை மாற்றும் மருந்து

1. முதலாம் படி :

உலக நிகழ்ச்சிகள் - நடந்த, நடக்கின்ற, நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் நீதி:

தெய்வ நீதி

விளக்கம் :

அ) கணித பரிபாஷையிற் சொல்லுவதானால் நிகழ்ச்சிகள் அனைத்தம் தரவு (Data) தத்தம் எனினுமமையும்.

ஆ) தரவை விடுவித்து நீதியைக் காணுவது உன் கடன்

2. இரண்டாம் படி :

"நீதியாய நிகழ்ச்சிகள் அனைத்தும் உன் நன்மையின் பொருட்டே என்பது" இது மிக மிக ஆழ்ந்து சிந்திக்கற் பாலது.

அ) துன்ப அநுபவம் நேரிடும்போது நமக்கு வெறுப்பு உண்டாய்விடுகிறது. இது பெரும் தப்பு. நமது நன்மைக்குத் தெய்வந் தந்ததை வெறுக்கலாமா? வெறுப்பது இருக்கிற வினை போதாமல் மேலும் பெருக்குவதாகும்.

ஆ) ஒருவர் அவசிய அலுவல் பற்றி ஓரிடத்திற்குப் போகவேண்டியவர், வண்டியைத் தவறவிடுகிறார். அதனால் கவலை மேலிட்டுத் தெய்வத்தை நோகின்றார். சிறிது நேரத்தின் பின் தாம் போக நினைத்த வண்டி பள்ளத்தாக்கு ஒன்றில் வீழ்ந்து நொருங்கிய சம்பவங் கேட்டுத் தெய்வத்தை வாழ்த்துகின்றார்.

பிராரத்தம் தெய்வ நியதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மூன்றாம் படி :

பிராரத்தம் அனுபவம் பொறுக்க முடியாதிருந்தால், தெய்வத்தை நோவாமல், தன் நன்மைக்கு வந்ததென்பதை ஊன்றி உணர்ந்துகொண்டு, "தாங்க முடியவில்லை, இரங்கி அருள வேண்டும்" என்று, நீதி செய்த தெய்வத்தை வேண்டித் தவம் கிடக்கலாம். அதனால் துன்ப சாந்தி உண்டாம்.

உ - ம்

அருச்சுனன் கிருஷ்ணனைச் சரணடைந்தான்;
கழுத்தைத் தள்ளவந்த நாகபாசம் முடியைத் தள்ளிச் சென்றது.

4. வரலாறு:

மேலே பேசப்பட்ட முக்கூட்டு மாத்திரை மார்க்க அரேலியரின் "ஆத்மசிந்தனை" மார்க்க அரேலியர் (Marcus Aurelius) 1800 வருடங்களுக்கு முன் உரோமாபுரியை ஆண்ட சக்கரவர்த்திகளுள் ஒருவர்: ஆத்மஞானி.

சக்கரவர்த்தியின் "ஆத்ம சிந்தனை" யைத் தமிழாக்கஞ் செய்தவர் மற்றொரு சக்கரவர்த்தி ராஜாஜி.

சிந்தனை 180 பிரிவுகொண்டது. நாடோறும் ஒவ்வொரு சிந்தனையைச் சிந்தனையிலிருத்திச் சீரணம் செய்க.

ஒவ்வொரு சிந்தனையும் மனக்கவலை மாற்றும் மருந்தாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றி நவில்கின்றோம்...

திருமதி தெய்வானைப்பிள்ளை பேரம்பலம் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு தொடர்புச் சாதனங்கள் மூலமும் நேரிலும் வந்து துயர் பகிர்ந்த அனைத்து அன்புள்ளங்களுக்கும், அந்திமக் கிரியைகள், இறுதி ஊர்வலம் ஆகியவற்றில் பங்கு பற்றிய அன்பர்கள், மலர் வளையங்களைச் சாத்தியவர்கள், அஞ்சலி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டவர்கள், அஞ்சலி உரை ஆற்றிய பெரியோர்கள், உசன் இராமநாதன் மகா வித்தியாலய சமூகத்தினர்கள், அமரருக்கு ஓர் அஞ்சலி நிகழ்வை சிறப்புற நடாத்தி எமக்குத் துயர் பகிரும் துண்டுப் பிரசுரத்தையும் வழங்கிய கனடா உசன் ஐக்கிய மக்கள் ஒன்றியத்தினர், உசன் இந்து இளைஞர் மன்றத்தினர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகத்தினர்கள், அமரர் நோயுற்ற போது சிகிச்சையளித்த யாழ் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரிச் சமூகத்தினர்கள், திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலய சமூகத்தினர்கள், பத்திரிகை நல்லுள்ளங்கள், இவரின் ஞாபகார்த்தமாக வெளிவரும் "தெய்வ தரிசனம்" என்னும் மலர் வெளிவர உதவியவர்கள், மற்றும் பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபையினர், அமரரின் சகல கிரியைகளையும் செய்த சிவாச்சாரியார்கள் ஆகிய சகலருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

குடும்பத்தினர்

ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம். 021 221 9129

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org